# TNPSC GROUP 1 PRELIMINARY EXAMINATION 2026
# GENERAL STUDIES – QUESTION PAPER

**Date of Examination:** 27.09.2026

**Telegram:** https://t.me/arivarkacademy

**Website:** https://arivark.com

**YouTube:** https://youtube.com/@stayupdatedtnpsc

**Instagram:** https://www.instagram.com/sandhiyaamani

1. **Choose the right matches in the following pairs :**
   **(1) Commensalism - One population benefits but second one is neither benefited nor affected.**
   **(2) Mutualism - Two populations living together but neither affects nor benefits.**
   **(3) Amensalism - One population prey on another at all times.**
   **(4) Competition - Populations are not affecting directly but fight for resources.**
   **பின்வரும் இணைகளில் சரியான பொருத்தங்களைத் தேர்ந்தெடுக்கவும் :**
   **(1) கம்மென்சலிசம் (Commensalism) - ஒரு இனத்தொகுப்பு நன்மையடைகிறது. ஆனால் மற்றவைக்கு நன்மை தீமை இரண்டுமில்லை.**
   **(2) மியுச்சுயாலிசம் (Mutualism) - இரண்டு இனத்தொகுப்புகள் ஒன்றாக வாழ்பவை. ஆனால் நன்மையோ, தீமையோ இல்லை.**
   **(3) அமென்சலிசம் (Amensalism) - எல்லா நேரங்களிலும் ஒரு இனத்தொகுப்பு மற்றொன்றை வேட்டையாடுகிறது.**
   **(4) போட்டி (Competition) - இனத்தொகுப்புகள் நேரடியாகப் பாதிக்கப்படாமல் வளங்களுக்காகப் போட்டியிடுகின்றன.**
   A) (2) and (3) are correct / (2) மற்றும் (3) சரியானவை
   B) (1) and (3) are correct / (1) மற்றும் (3) சரியானவை
   C) (1) and (4) are correct / (1) மற்றும் (4) சரியானவை
   D) (3) and (4) are correct / (3) மற்றும் (4) சரியானவை
   E) Answer Not Known / விடை தெரியவில்லை
2. **Assertion [A] : Databases of the Digital Herbarium simplify taxonomical references.**
   **Reason [R] : Databased images cannot help in confirming a specimen's historical collection data or location.**
   **கூற்று [A] : டிஜிட்டல் உலர் தாவரத் தொகுப்புத் தரவுத்தளங்கள் வகைப்பாட்டியல் குறிப்புகளை எளிதாக்குகின்றன.**
   **காரணம் [R] : தரவுத்தளத்தில் உள்ள படங்கள், ஒரு மாதிரியின் வரலாற்றுச் சேகரிப்பு தேதி அல்லது இருப்பிடத்தை உறுதிப்படுத்த உதவாது.**
   A) [A] is false, [R] is true / [A] தவறானது, [R] சரியானது
   B) [A] is true, but [R] is false / [A] சரியானது, ஆனால் [R] தவறானது
   C) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரியானவை, மேலும் [R] என்பது [A] யின் சரியான விளக்கமாகும்
   D) Both [A] and [R] are true; but [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரியானவை, ஆனால் [R] ஆனது [A] யின் சரியான விளக்கமல்ல
   E) Answer Not Known / விடை தெரியவில்லை
3. **Assertion and Reason Type.**

**Assertion [A] : Mendel's law of independent assortment the genes for each character separate and enter the gametes independently of the genes of the others characters.**

**Reason [R] : Closely located genes assort independently.**

**வலியுறுத்தல் [A] மற்றும் காரணம் [R] வகை.**

**வலியுறுத்தல் [A] : மெண்டலின் சார்பின்றி ஒதுங்கும் விதியின்படி ஒவ்வொரு பண்புகள் மரபணுக்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டு மற்ற பண்புகளின் மரபணுக்களில் இருந்து தனித்து ஒதுங்கும் கேமீட்டுகளை உள்ளிடுகின்றன.**

**காரணம் [R] : நெருக்கமாக அமைந்துள்ள மரபணுக்கள் சார்பின்றி ஒதுங்கும்.**

A) [A] is correct but [R] is not correct / [A] சரி ஆனால் [R] தவறு

B) [A] is not correct but [R] is correct / [A] தவறு ஆனால் [R] சரி

C) Both [A] and [R] are correct and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] சரியானவை மற்றும் [R] என்பது [A] யின் சரியான விளக்கமாகும்

D) Both [A] and [R] are correct but [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] சரியானவை ஆனால் [R] என்பது [A] யின் சரியான விளக்கமல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

4. **Match the following :**

**(a) Minamata disease - 1. Nitrate**

**(b) Itai-Itai disease - 2. Mercury**

**(c) Black foot disease - 3. Cadmium**

**(d) Blue baby syndrome - 4. Arsenic**

**பின்வருவனவற்றைப் பொருத்துக :**

**(a) மினமாட்டா நோய் - 1. நைட்ரேட்**

**(b) இடாய்-இடாய் நோய் - 2. பாதரசம்**

**(c) கருப்புப் பாத நோய் - 3. காட்மியம்**

**(d) நீலக் குழந்தை நோய் - 4. ஆர்சனிக்**

A) 4 3 2 1

B) 2 3 4 1

C) 3 1 2 4

D) 1 2 3 4

E) Answer Not Known / விடை தெரியவில்லை

5. **Consider the statements given below and choose the correct answer :**

**Assertion [A] : Iron ore is the most widely distributed element of the earth's crust and it rarely occurs in a free state.**

**Reason [R] : Magnetite is black in colour and has 60% of pure iron.**

**கீழ்க்காணும் வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் சரியான விடையைத் தேர்வு செய்யவும் :**

**கூற்று [A] : புவியின் மேல் அடுக்கில் மிகப் பரவலாகக் காணப்படும் தாது இரும்புத்தாது ஆகும். மேலும் இது தனித்த நிலையில் மிக அரிதாகவே காணப்படுகிறது.**

**காரணம் [R] : மேக்னடைட் கருப்பு நிறமுடையது. இது 60% தூய இரும்பைக் கொண்டது.**

A) Both [A] and [R] are true ; [R] explains [A] / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி; கூற்று [A]க்கான காரணம் [R] சரி

B) Both [A] and [R] are true ; [R] does not explain [A] / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி; கூற்று [A]க்கான காரணம் [R] சரியல்ல

C) [A] is true, [R] is false / கூற்று [A] சரி, காரணம் [R] தவறு

D) [A] is false, [R] is true / கூற்று [A] தவறு, காரணம் [R] சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

6. **Match the following :**

**(a) 1737 - 1. Orissa cyclone**

**(b) 1970 - 2. Calcutta cyclone**

**(c) 1991 - 3. Bhola cyclone**

**(d) 1999 - 4. Bangladesh cyclone**

**பொருத்துக :**

**(a) 1737 - 1. ஒரிசா புயல்**

**(b) 1970 - 2. கொல்கத்தா புயல்**

**(c) 1991 - 3. போலா புயல்**

**(d) 1999 - 4. வங்கதேச புயல்**

A) 2 3 4 1

B) 3 4 2 1

C) 4 3 2 1

D) 1 2 3 4

E) Answer Not Known / விடை தெரியவில்லை

7. **Assertion [A] : Tamil Nadu state remains dry during the South West Monsoon season.**

**Reason [R] : Tamil Nadu coast lies in the rain shadow area of the Arabian sea, current and is parallel to the Bay of Bengal current.**

**கூற்று [A] : தென்மேற்கு பருவக் காலத்தில் தமிழகத்தில் வறண்ட நிலையே காணப்படும்.**

**காரணம் [R] : தமிழ்நாட்டின் அமைவிடமானது அரபிக்கடல் நீரோட்டத்தின் மழை மறைவுப் பகுதியிலும், வங்காள விரிகுடா நீரோட்டத்திற்கு இணையாகவும் அமைந்துள்ளது.**

A) [A] is true but [R] is false / [A] சரி ஆனால் [R] தவறானது

B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரி மற்றும் [R] என்பது [A] இன் சரியான விளக்கம்

C) [A] is false, [R] is true / [A] தவறு, ஆனால் [R] சரி

D) Both [A] and [R] are true and [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரி மற்றும் [R] என்பது [A] இன் சரியான விளக்கம் அல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

8. **Which of the following are examples of nature - based solutions for disaster risk reduction mentioned in the Tamilnadu State Disaster Management (TNSDM) Policy?**

**(i) Wetland Restoration**

**(ii) Blue - Green infrastructure**

**(iii) Concrete flood wall construction**

**(iv) Sponge cities**

**தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை கொள்கையில் (TNSDM) குறிப்பிடப்பட்டுள்ள இயற்கை அடிப்படையிலான தீர்வுகள் எவை?**

**(i) சதுப்பு நில மறுசீரமைப்பு**

**(ii) நீலம் - பசுமை உள்கட்டமைப்பு**

**(iii) கான்கிரீட் வெள்ளத் தடுப்புச் சுவர்கள்**

**(iv) ஸ்பாஞ்ச் நகரங்கள்**

A) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

B) (i), (ii) and (iv) only / (i), (ii) மற்றும் (iv) மட்டும்

C) (i) and (iv) only / (i) மற்றும் (iv) மட்டும்

D) (i), (ii) and (iii) only / (i), (ii) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

9. **Which of the following is incorrectly paired?**
**பின்வருவனவற்றில் எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது?**

A) IPCC - International Panel on Climate Change / IPCC - காலநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கிடையான குழு

B) CPC - Climate Prediction Centre / CPC - காலநிலை கணிப்பு மையம்

C) NOAA - National Oceanic and Atmospheric Administration / NOAA - தேசிய கடல் மற்றும் வளிமண்டல முகமை

D) UNEP - United Nations Environment Programme / UNEP - ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

10. **Which of the following statements are true about Thanthai Periyar?**

**(i) When the Justice party renamed as Dravidar Kazhagam, Thanthai Periyar introduced the flag featured with red circle in black background.**

**(ii) The flag of Dravida Kazhagam was introduced in Trichy conference.**

**(iii) The red circle represented the revolutionary thoughts.**

**கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்களில் தந்தை பெரியார் பற்றிய சரியான தொடரைக் கூறுக.**

**(i) நீதிக்கட்சி திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட போது கருப்பு பின்னணியுடன் சிவப்பு வட்டம் உள்ள கொடியை தந்தை பெரியார் அறிமுகப்படுத்தினார்.**

**(ii) திருச்சி மாநாட்டில் திராவிடர் கழகத்தின் கொடி அறிமுகப்படுத்தப்பட்டது.**

**(iii) கொடியின் சிவப்பு வட்டப்பகுதி புரட்சி சிந்தனைகளைக் குறிக்கிறது.**

A) (i) only / (i) மட்டும்

B) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

C) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

D) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

11. **Assertion [A] : Subash Chandra Bose believed in war and violence for the liberation of India.**

**Reason [R] : He subscribed to the Gandhian Principles of Non-violence.**

**கூற்று [A] : சுபாஷ் சந்திர போஸ் இந்தியாவின் விடுதலைக்காக போர் மற்றும் வன்முறையில் நம்பிக்கைக் கொண்டிருந்தார்.**

**காரணம் [R] : அவர் காந்தியக் கொள்கையான அஹிம்சையை ஏற்றுக்கொண்டார்.**

A) [A] is true but [R] is false / கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு

B) Both [A] and [R] are true ; and [R] is the correct explanation of [A] / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி. காரணம் [R] கூற்று [A] க்கான சரியான விளக்கமாகும்

C) [A] is false, [R] is true / கூற்று [A] தவறு. காரணம் [R] சரி

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி. காரணம் [R] கூற்று [A] க்கான சரியான விளக்கமல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

12. **Who was not the founding member of the Muslim League in 1906?**
**கீழ்க்காணும் தலைவர்களில் 1906 ஆம் ஆண்டு முஸ்லிம் லீக் நிறுவப்பட்ட போது அதன் நிறுவன உறுப்பினராக இல்லாதவர் யார்?**

A) Nawab Salimullah / நவாப் சலீமுல்லா

B) Aga Khan / ஆகா கான்

C) Mohsin-Ul-Mulk / மொகசின்-உல்-முல்க்

D) M.A. Jinnah / மு.அ. ஜின்னா

E) Answer Not Known / விடை தெரியவில்லை

13. **Match the following type :**
**(a) Mahakavi Bharathiyar - 1. Chennimalai**
**(b) Kappalottiya Thamizhan V.O. Chidambaranar - 2. Vathalagundu**
**(c) Subramaniya Siva - 3. Ettayapuram**
**(d) Tiruppur Kumaran - 4. Ottapidaram**
**சரியானவற்றைப் பொருத்துக :**
**(a) மகாகவி பாரதியார் - 1. சென்னிமலை**
**(b) கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் - 2. வத்தலகுண்டு**
**(c) சுப்ரமணிய சிவா - 3. எட்டயபுரம்**
**(d) திருப்பூர் குமரன் - 4. ஒட்டப்பிடாரம்**

A) 3 4 2 1

B) 3 1 2 4

C) 1 3 2 4

D) 3 1 4 2

E) Answer Not Known / விடை தெரியவில்லை

14. **Reason and Assertion Type.**
**Assertion [A] : On April 8, 1929 C.E. revolutionaries Bhagat Singh and Batukeshwar Dutt threw bombs into the Central Legislative Assembly.**
**Reason [R] : Bhaghat Singh and B.K. Dutt were against the passage of the Public Safety Bill and the Trade Disputes Bill.**
**காரணம் மற்றும் கூற்று வகை.**
**கூற்று [A] : பொ.ஆ. 1929 ஏப்ரல் 8-ஆம் தேதி, புரட்சியாளர்களான பகத்சிங் மற்றும் பதுகேஷ்வர் தத் ஆகியோர் மத்திய சட்டப் பேரவையில் குண்டுகளை வீசினர்.**
**காரணம் [R] : பகத்சிங் மற்றும் பதுகேஷ்வர் தத் ஆகியோர் பொதுப் பாதுகாப்பு மசோதா மற்றும் (தொழில் தகராறு) தொழில் சர்ச்சைகள் மசோதா ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு எதிராக செயல்பட்டனர்.**

A) [A] is true but [R] is false / [A] சரியானது, ஆனால் [R] தவறானது

B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரியானது, மேலும் [R] ஆனது [A] விற்கான சரியான விளக்கம்

C) [A] is false and [R] is true / [A] தவறானது, [R] சரியானது

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரியானது, ஆனால் [R] ஆனது [A] விற்கான சரியான விளக்கம் அல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**15. Which one of the following pairs is correctly matched?**

**(i) Lord Cornwallis - Subsidiary Alliance**

**(ii) Lord Dalhousie - Permanent Settlement of Bengal**

**(iii) Lord Lytton - Doctrine of Lapse**

**(iv) Lord Curzon - Partition of Bengal**

**சரியான இணையைத் தேர்வு செய்க.**

**(i) கார்ன்வாலிஸ் பிரபு - துணைப்படைத் திட்டம்**

**(ii) டல்ஹவுசி பிரபு - வங்காளத்தின் நிரந்தர குடியேற்றம்**

**(iii) லிட்டன் பிரபு - வாரிசு இழப்புக் கொள்கை**

**(iv) கர்சன் பிரபு - வங்காளப் பிரிவினை**

A) (i) only / (i) மட்டுமே

B) (iv) only / (iv) மட்டுமே

C) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டுமே

D) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டுமே

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**16. Arrange the following events in chronological order :**

**(1) The Arya Samaj**

**(2) Ramakrishna Mission**

**(3) Brahmo Samaj**

**(4) Prarthana Samaj**

**காலவரிசைப்படி வரிசைப்படுத்துக.**

**(1) ஆரிய சமாஜம்**

**(2) இராமகிருஷ்ணா இயக்கம்**

**(3) பிரம்ம சமாஜம்**

**(4) பிரார்த்தன சமாஜம்**

A) (1), (2), (3), (4)

B) (3), (1), (2), (4)

C) (3), (4), (1), (2)

D) (4), (3), (2), (1)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**17. Reason and Assertion type :**

**Assertion [A] : The Qadiriya order of Sufism had been popularised in the Punjab by Sheik Kalimullah.**

**Reason [R] : The Qadiriya order of Sufism strongly supported the doctrine of Wahdat-al-Wajud (Unity of being).**

**காரணம் மற்றும் கூற்று வகை :**

**கூற்று [A] : ஷேக் கலிமுல்லாவால் பஞ்சாபில் காதிரியா வரிசை சூஃபிஸம் பிரபலப்படுத்தப்பட்டது.**

**காரணம் [R] : சூஃபிஸீவத்தின் காதிரியா பிரிவு 'வஹ்தத்-அல்-வஜீத்' (இருப்பின் ஒருமை) எனும் கோட்பாட்டை வலுவாக ஆதரித்தது.**

A) [A] is true, but [R] is false / [A] சரியானது ஆனால் [R] தவறானது

B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரியானது; மேலும் [R] ஆனது [A] விற்கான சரியான விளக்கம்

C) [A] is false and [R] is true / [A] தவறானது; [R] சரியானது

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரியானது; ஆனால் [R] ஆனது [A] விற்கான சரியான விளக்கம் அல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**18. Assertion [A] : A medieval Historian Zia-ud-din Barani encouraged the inclusion of Neo-Muslims into Aristocracy.**

**Reason [R] : Balban's son Prince Muhammed valued knowledge and talent than noble - birth.**

**கூற்று [A] : மத்திய கால வரலாற்றாசிரியர் ஜியாவுத்தீன் பரணி புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்களை அரசவை கோமான்களாக சேர்ப்பதற்கு ஊக்குவித்தார்.**

**காரணம் [R] : பால்பனின் மகனான இளவரசன் முகம்மது உயர்குடிப் பிறப்பைவிடச் சிறந்த அறிவும் திறமையுமே முக்கியம் என்பதை நிரூபித்தார்.**

A) [A] is true, but [R] is false / [A] சரியானது; ஆனால் [R] தவறானது

B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரியானது. மேலும் [R] ஆனது [A] விற்கான சரியான விளக்கம்

C) [A] is false and [R] is true / [A] தவறானது. மேலும் [R] சரியானது

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரியானது. ஆனால் [R] ஆனது [A] விற்கான சரியான விளக்கம் அல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**19. Assertion [A] : India conducted Operation Blue Star in May 2025.**

**Reason [R] : Pakistan - backed terror attack was launched in Pahalgam, and 26 innocent civilians were killed.**

**கூற்று [A] : மே 2025-ல் இந்தியா நீல நட்சத்திர தாக்குதலை நடத்தியது.**

**காரணம் [R] : பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாத தாக்குதல் பஹல்காமில் நடத்தப்பட்டது. இதில் 26 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.**

A) [A] is true but [R] is false / [A] சரி ஆனால் [R] தவறு

B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] சரி, ஆனால் [R] என்பது [A]-ன் சரியான விளக்கம்

C) [A] is false but [R] is true / [A] தவறு ஆனால் [R] சரி

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] சரி, ஆனால் [R] என்பது [A]ன் சரியான விளக்கமில்லை

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**20. Match the following events based on the year of introduction :**

**(a) Blue Revolution - 1. 1965**

**(b) White Revolution - 2. 1974**

**(c) Green Revolution - 3. 1985**

**(d) Total Revolution - 4. 1970**

**கீழ்க்கண்ட நிகழ்வுகளை அறிமுகமான ஆண்டின் அடிப்படையில் சரியாகப் பொருத்துக.**

**(a) நீலப்புரட்சி - 1. 1965**

**(b) வெண்மைப்புரட்சி - 2. 1974**

**(c) பசுமைப்புரட்சி - 3. 1985**

**(d) முழுமையான புரட்சி - 4. 1970**

A) 3 4 1 2

B) 4 2 1 3

C) 2 3 4 1

D) 3 4 2 1

E) Answer Not Known / விடை தெரியவில்லை

21. **Which of the following is incorrectly paired?**

**(1) Bismilla Khan - Tabla**

**(2) T.N. Krishnan - Violinist**

**(3) Zahir Hussain - Shenoi**

**(4) Ravi Shankar - Sitar**

**தவறான பொருத்தங்களைத் தேர்ந்தெடுக்கவும்.**

**(1) பிஸ்மில்லா கான் - கைம்முரசு இணை**

**(2) T.N. கிருஷ்ணன் - வயலின் கலைஞர்**

**(3) ஜாகிர் ஹுசைன் - நாதசுரம் போன்ற குழல்வகை**

**(4) ரவி சங்கர் - நரம்பு இசைக்கருவி**

A) (1) and (4) / (1) மற்றும் (4)

B) (1) and (3) / (1) மற்றும் (3)

C) (2) and (3) / (2) மற்றும் (3)

D) (2) and (4) / (2) மற்றும் (4)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

22. **Identify the country does not have a Federal System of Government.**

**கூட்டாட்சி இயல்புகளை கொண்டிராத அரசாங்கத்தையுடைய நாட்டினை கண்டறிக.**

A) Russia / ரஷ்யா

B) Switzerland / சுவிட்சர்லாந்து

C) Australia / ஆஸ்திரேலியா

D) South Africa / தென்னாப்பிரிக்கா

E) Answer Not Known / விடை தெரியவில்லை

23. **University of Madras was started based on whose report?**

**யாருடைய அறிக்கையின் அடிப்படையில் சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது?**

A) Lord Ripon / ரிப்பன் பிரபு

B) Sir Charles Wood / சர் சார்லஸ் உட்

C) William Bentick / வில்லியம் பெண்டிக்

D) Norton / நார்டன்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

24. **Match the following :**

**Subject - Year**

**(a) India's membership of the commonwealth - 1. 1950**

**(b) India adopted National Anthem - 2. 1949**

**(c) India adopted National Flag - 3. 1948**

**(d) First draft of the Constitution Published - 4. 1947**

**பொருத்துக :**

**பொருள் - ஆண்டு**

**(a) காமன்வெல்த்தில் இந்தியா உறுப்பினரானது - 1. 1950**

**(b) இந்தியாவில் தேசியகீதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது - 2. 1949**

**(c) இந்தியாவில் தேசியக்கொடி ஏற்றுக்கொள்ளப்பட்டது - 3. 1948**

**(d) அரசியலமைப்பின் முதல் வரைவு பிரதி வெளியிடப்பட்டது - 4. 1947**

A) 2 1 4 3

B) 4 1 2 3

C) 2 3 4 1

D) 1 2 4 3

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**25. Arrange the following items in chronological order according to the parts of the Indian constitution:**

**(1) Elections**

**(2) Official languages**

**(3) Panchayat Raj**

**(4) Union Territories**

**இந்திய அரசியலமைப்புச் சட்டப் பகுதிகளின் அடிப்படையில் பின்வரும் இனங்களை கால வரிசைப்படுத்துக :**

**(1) தேர்தல்கள்**

**(2) அலுவலக மொழிகள்**

**(3) பஞ்சாயத்து ராஜ்**

**(4) யூனியன் பிரதேசங்கள்**

A) (4), (3), (1), (2)

B) (3), (4), (2), (1)

C) (2), (3), (1), (4)

D) (4), (3), (2), (1)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**26. Which among the following is correct with regard to Fundamental Rights in India?**

**(i) Fundamental Rights uphold equality of certain individuals.**

**(ii) It establishes a Government of Laws and not of men.**

**(iii) It promotes the ideal of political democracy.**

**இந்தியாவில் அடிப்படை உரிமை தொடர்பான கருத்துகளில் சரியானவை எவை?**

**(i) அடிப்படை உரிமைகள் குறிப்பிட்ட தனிநபர்கள் சிலரின் சமத்துவத்தைத் தாங்கிப்பிடிக்கிறது.**

**(ii) அடிப்படை உரிமைகள் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுகின்றன; மனிதர்களின் ஆட்சியை நிலைநாட்டவில்லை.**

**(iii) அடிப்படை உரிமைகள் மக்களாட்சி அரசியலின் இலட்சியத்தை மேம்படுத்துகிறது.**

A) (i), (ii) and (iii) are correct / (i), (ii) மற்றும் (iii) சரி

B) (i) and (ii) are correct / (i) மற்றும் (ii) சரி

C) (ii) and (iii) are correct / (ii) மற்றும் (iii) சரி

D) (i) and (iii) are correct / (i) மற்றும் (iii) சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**27. Fundamental duties under Indian Constitution apply to which of the following?**

**இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கடமைகள் கீழ் கூறப்படுபவர்களில் யாருக்குப் பொருந்தும்?**

A) Citizens of India only / இந்திய குடிமக்களுக்கு மட்டும்

B) All persons / அனைத்து நபர்களுக்கும்

C) To foreigners also / வெளிநாட்டினருக்கும்

D) To citizens above 21 years only / 21 வயதுக்கு மேற்பட்ட குடிமக்களுக்கு மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

28. **Which of the following was added to the Directive Principles list by 42nd Amendment Act of 1976?**
**1976 ஆம் ஆண்டின் 42வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின் மூலம் பின்வருவனவற்றுள் எது வழிகாட்டும் நெறிமுறைகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டது?**

A) Equal justice and free legal aid (Art. 39 A) / சமநீதி மற்றும் இலவச சட்ட உதவி (சரத்து 39-அ)

B) Organisation of village Panchayats (Art. 40) / கிராம ஊராட்சிகள் அமைப்புகள் (சரத்து 40)

C) Uniform Civil code (Art. 44) / குடிமக்களுக்கு ஒரே மாதிரியான உரிமையியல் சட்டம் (சரத்து 44)

D) Provision for free and compulsory education for children (Art. 45) / குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாய கல்வி (சரத்து 45)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

29. **Which of the following statement(s) is/are true about the election of the President of India?**

**(i) The elected members of both Houses of Parliament.**

**(ii) The elected members of the Legislative Assemblies of the States.**

**(iii) The members of the Legislative Assemblies of the all Union Territories.**

**கீழ்க்காணும் இந்திய குடியரசு தலைவர் தேர்வுமுறைகளுள் எது/எவை சரியானது?**

**(i) பாராளுமன்றத்தின் ஈரவைகளிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இந்திய குடியரசுத் தலைவரை தேர்வு செய்கின்றனர்.**

**(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் இந்திய குடியரசுத் தலைவரை தேர்வு செய்கின்றனர்.**

**(iii) அனைத்து ஒன்றிய பிரதேசங்களில் உள்ள உறுப்பினர்கள் இந்திய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கின்றனர்.**

A) (i) only / (i) மட்டும்

B) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

C) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

D) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

30. **Assertion [A] : While a proclamation of emergency is in operation, a Parliament shall have power to make Laws with respect to any of the matters enumerated in the state list.**

**Reason [R] : Article 1 of the Indian Constitution describes India as a Union of States.**

**கூற்று [A] : நெருக்கடி நிலை செயல்பாட்டில் உள்ளபோது, மாநிலப் பட்டியலில் உள்ள எந்தத் துறைகள் குறித்தும் சட்டமியற்ற பாராளுமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.**

**காரணம் [R] : இந்திய அரசமைப்பின் சரத்து 1, இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியம் என விவரிக்கின்றது.**

A) [A] is true, but [R] is false / கூற்று [A] சரி, ஆனால் காரணம் [R] தவறு

B) [A] is false, but [R] is true / கூற்று [A] தவறு, ஆனால் காரணம் [R] சரி

C) Both [A] and [R] are false / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் தவறு

D) Both [A] and [R] are true / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

31. **Choose the right matches.**

**Dates of Constitution of the Lok Sabha**

**(1) Fourth Lok Sabha - 23.03.1977**

**(2) Sixth Lok Sabha - 15.03.1971**

**(3) Eighth Lok Sabha - 31.12.1984**

**(4) Tenth Lok Sabha - 20.06.1991**

**பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.**

**மக்களவை அமைந்த நாட்கள்**

**(1) நான்காவது மக்களவை - 23.03.1977**

**(2) ஆறாவது மக்களவை - 15.03.1971**

**(3) எட்டாவது மக்களவை - 31.12.1984**

**(4) பத்தாவது மக்களவை - 20.06.1991**

A) (1) and (3) are correct / (1) மற்றும் (3) சரி

B) (1) and (2) are correct / (1) மற்றும் (2) சரி

C) (2) and (3) are correct / (2) மற்றும் (3) சரி

D) (3) and (4) are correct / (3) மற்றும் (4) சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

32. **Which of the following statements is/are true about Governor's power for assent to Bill?**

**(i) The Governor can reserve the Bill for the consideration of the President.**

**(ii) He can assent the Bill but he cannot withhold the assent.**

**(iii) When a Bill is likely to affect the powers of High Courts of state the Governor must reserve it for the consideration of President.**

**மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்தல் தொடர்புடைய ஆளுநரின் அதிகாரம் குறித்த பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானது?**

**(i) ஆளுநர் ஒரு மசோதாவைக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக நிறுத்தி வைக்கலாம்.**

**(ii) ஆளுநர் மசோதாவிற்கு இசைவு வழங்கலாம் ஆனால் இசைவிற்காக நிறுத்தி வைக்க இயலாது.**

**(iii) ஒரு மசோதா மாநில உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்தைப் பாதிக்கச் செய்யும் என ஆளுநர் கருதினால் அம்மசோதாவைக் குடியரசு தலைவரின் பரிசீலனைக்காக நிறுத்தி வைக்கலாம்.**

A) (i) only / (i) மட்டும்

B) (iii) only / (iii) மட்டும்

C) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

D) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

33. **Which of the following statement is/are correct with regard to the Council of Ministers of a state?**

**(i) To aid and advise the Governor in the exercise of his functions.**

**(ii) The Ministers are appointed by the Chief Minister of the State.**

**(iii) The Council of Ministers are collectively responsible to the Legislative Assembly of the State.**

**மாநில அமைச்சர்கள் குழு குறித்துப் பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானவை?**

**(i) ஆளுநரின் செயல்பாடுகளில் அவருக்கு உதவியையும் ஆலோசனையும் அளித்தல்.**

**(ii) மாநில முதலமைச்சர் அமைச்சர்களை நியமனம் செய்கிறார்.**

**(iii) அமைச்சரவை மாநில சட்டமன்றத்திற்கு ஒட்டுமொத்தப் பொறுப்புடையது.**

A) (i) only / (i) மட்டும்

B) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

C) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

D) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

34. **Which is/are the statement correct about the Money Bills?**

**(i) A Money Bill cannot originate the Upper House.**

**(ii) The Upper House has no power to amend or reject Money Bill.**

**(iii) Constitution has a provision for resolving any deadlock between the two houses regarding Money Bills.**

**பின்வருவனவற்றுள் 'பண மசோதா' குறித்து எது/எவை சரியானதை தெரிவு செய்க?**

**(i) சட்ட மேலவையில் பண மசோதாவை அறிமுகம் செய்ய இயலாது.**

**(ii) சட்ட மேலவை பண மசோதாவை திருத்தமோ/இரத்தோ செய்ய இயலாது.**

**(iii) பண மசோதா குறித்து இரு அவைகளுக்கும் முட்டுக்கட்டை ஏற்படும் போது தீர்வு காண அரசமைப்பில் வழிவகை வாசகம் உள்ளது.**

A) (i) only / (i) மட்டும்

B) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

C) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

D) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

35. **Match the following :**

**Subject-matter - Articles**

**(a) Powers to impose taxes of Panchayats - 1. Article 243 I**

**(b) Audits of Panchayats - 2. Article 243 D**

**(c) Finance Commission to Panchayats - 3. Article 243 E**

**(d) Reservation of Panchayats - 4. Article 243 J**

**5. Article 243 H**

**பின்வருவனவற்றைப் பொருத்துக :**

**பொருள் - சரத்து**

**(a) பஞ்சாயத்துகளுக்கு வரி விதிக்கும் அதிகாரங்கள் - 1. சரத்து 243 I**

**(b) பஞ்சாயத்து தணிக்கைகள் - 2. சரத்து 243 D**

**(c) பஞ்சாயத்துகளின் நிதி ஆணையம் - 3. சரத்து 243 E**

**(d) பஞ்சாயத்துகளின் இட ஒதுக்கீடு - 4. சரத்து 243 J**

**5. சரத்து 243 H**

A) 4 5 1 3

B) 5 4 1 2

C) 2 3 5 1

D) 3 2 4 5

E) Answer Not Known / விடை தெரியவில்லை

36. **Which of the following is/are true about the residuary powers under the Constitution?**

**(i) It follows the precedent of Canada.**

**(ii) The Constitution vests the residuary power in the Union Legislature.**

**(iii) Residuary powers are conferred upon the courts.**

**அரசமைப்புச் சட்டத்திலுள்ள எச்ச அதிகாரங்கள் குறித்து பின்வருவனவற்றுள் எது/எவை சரி?**

**(i) இவை கனடா நாட்டின் அரசமைப்பின்படி உள்ளது.**

**(ii) இவை இந்திய அரசியலமைப்பால் ஒன்றிய சட்டச்சபைக்கு வழங்கப்படுகின்றன.**

**(iii) இவை இந்திய நீதிமன்றங்களின் அதிகாரத்திற்கு விடப்பட்டுள்ளது.**

A) (i) only / (i) மட்டும்

B) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

C) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

D) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

37. **Consider the following statements about Union Public Service Commission. Which among the following statement is correct?**

**மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் குறித்து பின்வருவனவற்றுள் சரியானது எது?**

A) The expenses of the UPSC shall be charged on the consolidated fund of state / மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைய செலவினங்கள், மாநில திரள் நிதியத்திலிருந்து செலுத்தப்படும்

B) It shall be the duty of the UPSC will present annually to the Parliament of the work done by the Commission. / மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் அதன் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் அளிக்கும்

C) The Chairman and other members of the Commission shall be appointed by the Prime Minister / தலைவரும், இதர உறுப்பினர்களும் பிரதம மந்திரியால் நியமிக்கப்படுகிறார்கள்

D) A member of the UPSC shall be eligible for appointment as the Chairman of UPSC / மத்திய தேர்வாணைய உறுப்பினர், தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதி உள்ளது

E) Answer Not Known / விடை தெரியவில்லை

38. **Find out the correct statements on the 104th Constitutional Amendment Act, 2019.**

**(i) This Amendment extended the reservation of seats for the SC's and ST's in the Lok Sabha and State Legislative Assemblies for a further period of ten years i.e. upto 2030.**

**(ii) This Amendment eliminates the special representation of the Anglo-Indian Community in the Lok Sabha and State Legislative Assemblies by nomination.**

**(iii) This Amendment extended the special representation of the Anglo-Indian Community in the Lok Sabha and state Legislative assemblies by nomination for a further period of 10 years i.e. 2030.**

**2019 ஆம் ஆண்டு 104வது அரசமைப்புத் திருத்தச் சட்டம் குறித்த சரியான கூற்றுகளைத் தெரிவு செய்க.**

**(i) இந்தத் திருத்தமானது மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவை இடங்களில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டு (தனி) தொகுதிகளை மேலும் பத்தாண்டுகளுக்கு அதாவது 2030 வரை நீட்டித்தது.**

**(ii) இந்தத் திருத்தமானது ஆங்கிலோ-இந்தியன் வகுப்பினர்களுக்கான மக்களவை மற்றும் மாநிலச் சட்டப்பேரவையில் நியமனம் மூலம் பிரதிநிதித்துவப்படுவதற்கான இடஒதுக்கீட்டை நீக்கம் செய்தது.**

**(iii) இந்தத் திருத்தமானது ஆங்கிலோ-இந்திய வகுப்பினருக்கான மக்களவை மற்றும் மாநிலச் சட்டப்பேரவை இடங்களில் நியமனம் மூலம் பிரதிநிதித்துவப்படுவதற்கான இட ஒதுக்கீட்டை மேலும் பத்தாண்டு அதாவது 2030ம் ஆண்டு வரை நீட்டித்தது.**

A) (i) only / (i) மட்டும்

B) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

C) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

D) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

39. **Match the following :**

**Lok Ayukta in state - Estd. year**

**(a) Maharashtra - 1. 1973**

**(b) Rajasthan - 2. 1975**

**(c) Uttar Pradesh - 3. 1983**

**(d) Himachal Pradesh - 4. 1971**

**கீழ்க்காண்பவற்றைப் பொருத்துக :**

**மாநிலங்களில் லோக் ஆயுக்தா - நிறுவப்பட்ட ஆண்டு**

**(a) மகாராஷ்டிரா - 1. 1973**

**(b) ராஜஸ்தான் - 2. 1975**

**(c) உத்திரப்பிரதேசம் - 3. 1983**

**(d) இமாச்சலப்பிரதேசம் - 4: 1971**

A) 1 2 3 4

B) 2 3 4 1

C) 4 1 2 3

D) 3 4 1 2

E) Answer Not Known / விடை தெரியவில்லை

40. **Consider the following statements, choose the correct answer:**

**(i) The Right to Information Act enacted in the year 2005.**

**(ii) It empowers the public officials.**

**(iii) RTI Act makes the Democracy works for people in Real time.**

**(iv) The Act also includes information relating to any private body which can be accessed by the General Public.**

**கீழ்காணும் வாக்கியங்களை கருதுக, சரியான விடையை தேர்ந்தெடுக்க :**

**(i) தகவல் அறியும் உரிமை சட்டமானது 2005 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.**

**(ii) இது அரசாங்க ஊழியர்களுக்கு அதிகாரமளிக்கிறது.**

**(iii) தகவல் அறியும் உரிமைச் சட்டம், அதன் உண்மையான பொருளில், ஜனநாயகத்தை மக்களுக்காக வேலை செய்ய வைக்கிறது.**

**(iv) இச்சட்டமானது எந்த ஒரு தனியார் அமைப்புகளிடம் குடிமக்கள் தகவல்களை பெறுவதையும் சட்டமாக கொண்டிருக்கிறது.**

A) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

B) (iii) and (iv) only / (iii) மற்றும் (iv) மட்டும்

C) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

D) (i) and (iv) only / (i) மற்றும் (iv) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

41. **A party to become recognized State Political Party is to get**

**(i) In general election, the concerned party should get minimum 6% of valid vote.**

**(ii) In a state assembly elections the party should get victory in atleast 2 constituencies.**

**(iii) In general election, the concerned party should get minimum 8% of vote.**

**(iv) In a state assemble elections the party should get victory in atleast 4 constituencies.**

**ஒரு கட்சி மாநில கட்சியாக அங்கீகரிக்கப்பட வேண்டுமாயின்**

**(i) பொதுத்தேர்தலில் பதிவு செய்யப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் குறைந்தது 6% வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும்.**

**(ii) மாநில சட்டமன்றத்தில் குறைந்தது 2 இடங்களுக்கான தொகுதிகளிலாவது வெற்றி பெற்றிருக்க வேண்டும்.**

**(iii) பொதுத்தேர்தலில் பதிவு செய்யப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் குறைந்தது 8% வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும்.**

**(iv) மாநில சட்டமன்றத்தில் குறைந்தது 4 இடங்களுக்கான தொகுதிகளிலாவது வெற்றி பெற்றிருக்க வேண்டும்.**

A) (i) and (iv) are correct / (i) மற்றும் (iv) சரி

B) (ii) and (iii) are correct / (ii) மற்றும் (iii) சரி

C) (i) and (ii) are correct / (i) மற்றும் (ii) சரி

D) (iii) and (iv) are correct / (iii) மற்றும் (iv) சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

42. **Assertion [A], Reason [R] Question Type :**

**Assertion [A] : "Ascertaining Caste as part of the ongoing nation wide census exercise was nothing wrong" - Supreme Court.**

**Reason [R] : Ascertaining caste to know how many people are in need of welfare and it is a matter of public policy.**

**கருத்து [A] மற்றும் காரணம் [R] வினா வகை :**

**கருத்து [A] : தேசிய அளவில் நடைப்பெற்றுக் கொண்டிருக்கும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில், சாதியைத் தெரிந்து கொள்வது தவறானது இல்லை - உச்சநீதிமன்றம்.**

**காரணம் [R] : சாதியைத் தெரிந்து கொள்வதானது, எவ்வளவு மக்கள் நலத்திட்ட தேவைகளைக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை அறிந்து கொள்வதோடு, அது ஒரு பொதுக்கொள்கையுமாகும்.**

A) [A] and [R] are correct; [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரி; [R] என்பது [A]க்கு சரியான விளக்கமாகும்.

B) [A] and [R] are correct; [R] is not correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரி; [R] என்பது [A]க்கு சரியான விளக்கமல்ல.

C) [A] is true; [R] is false / [A] என்பது சரி; [R] என்பது தவறு

D) [R] is true; [A] is false / [R] என்பது சரி; [A] என்பது தவறு

E) Answer Not Known / விடை தெரியவில்லை

43. **Which of the following explain the withdrawal of rural women from total labour force in India?**

**(i) A large number of rural females are opting for education rather than joining the labour force in agriculture.**

**(ii) With the rise in the level of income in rural India, rural females engaged in agriculture withdrawing from the labour force and getting engaged in domestic activities.**

**(iii) Women are not adequately educated in rural areas.**

**கீழ்கண்டவற்றுள், எவை இந்தியாவில் கிராமப்புற பெண்கள் வேலை வாய்ப்புகளிலிருந்து வெளியேறுவதை சரியாக விளக்குகிறது?**

**(i) கிராமப்புற பெண்களில் பெரும்பாலானோர் வேளாண் வேலை வாய்ப்பைத் தவிர்த்து, கல்விக்கு முன்னுரிமை அளிக்கின்றனர்.**

**(ii) இந்தியாவின் கிராமப்புறங்களில் வருமான மட்டம் உயர்ந்து வருவதால், விவசாயத்தில் ஈடுபட்டிருந்த பெண்கள், வீட்டு வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.**

**(iii) கிராமப்புறப் பெண்கள் போதுமான கல்வி பெறவில்லை.**

A) (i) only / (i) மட்டும்

B) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

C) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

D) (i), (ii) and (iii) / (i), (ii) மற்றும் (iii)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

44. **Planning in India focused at realising a high rate of growth of output in the long term. A basic assumption was that shortage of capital goods in relation to employable persons constituted a fundamental constraint on growth in the economy. Therefore the planning process made no focus on economic growth was viewed as essential for improving the employment situation.**

**Which are the following is best implied in the given passage?**

**இந்தியாவில் திட்டமிடல் என்பது நீண்டகால உற்பத்தியில் அதிக வளர்ச்சி விகிதத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டது. வேலைவாய்ப்பு பெறக்கூடிய நபர்களுடன் ஒப்பிடும்போது, மூலதனப் பொருட்களின் பற்றாக்குறை பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படைத் தடையாக அமைகிறது என்பது ஓர் அனுமானம். எனவே, திட்டமிடல் பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்தவில்லை, அது வேலைவாய்ப்பு நிலையை அதிகரிப்பதற்காகக் கவனம் செலுத்துகிறது என்று பார்க்கப்படுகிறது.**

**கொடுக்கப்பட்ட பத்தியின் மூலம் பின்வருவனவற்றுள் எது சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது?**

A) Independent employment strategy for economic growth. / பொருளாதார வளர்ச்சிக்கான சுதந்திரமான வேலைவாய்ப்பு உத்தி.

B) Growth of employment and its constraint. / வேலையின் வளர்ச்சி மற்றும் அதன் கட்டுப்பாடு.

C) Approach to employment in economic planning. / பொருளாதார திட்டமிடலில் வேலை வாய்ப்புக்கான அணுகுமுறை.

D) Economic Development and employment. / பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு.

E) Answer Not Known / விடை தெரியவில்லை

45. **Which one of the following is not a fiscal instruments?**

**பின்வருவனவற்றில் எந்த ஒன்று நிதிக் கருவி இல்லை?**

A) Taxation / வரி விதிப்பு

B) Bank Rate / வங்கி விகிதம்

C) Public expenditure / பொதுச் செலவு

D) Public Debt / பொதுக்கடன்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

46. **Reason and Assertion type :**

**Assertion [A] : RBI Act, 1934 was amended in 2016.**

**Reason [R] : To implement flexible inflation targeting framework.**

**காரணம் மற்றும் கூற்று வகை :**

**கூற்று [A] : 1934 ஆம் ஆண்டின் ரிசர்வ் வங்கிச் சட்டம் 2016 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது.**

**காரணம் [R] : நெகிழ்வான பணவீக்க இலக்கு நிர்ணய கட்டமைப்பைச் செயல்படுத்துவதற்காக.**

A) [A] is true but [R] is false / [A] சரி ஆனால் [R] தவறு

B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R] என்பது [A] க்கு சரியான விளக்கமாகும்

C) [A] is false but [R] is true / [A] தவறு ஆனால் [R] சரி

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / [A] ம் [R] ம் சரி, ஆனால் [R] என்பது [A] க்கு சரியான விளக்கமல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**47. Which of the following has been suggested as a substitute for the Fiscal Responsibility and Budget Management (FRBM) Act by the Fourteenth Finance Commission?**

**பதினான்காவது (14) நிதி ஆணையத்தால் நிதிப் பொறுப்பு மற்றும் வரவு செலவு மேலாண்மை சட்டத்திற்கு மாற்றாகப் பின்வருவனவற்றில் எது பரிந்துரைக்கப்பட்டுள்ளது?**

A) Fiscal consolidation fund / நிதி ஒருங்கிணைப்பு நிதி

B) Debt ceiling and fiscal responsibility legislation / கடன் உச்சவரம்பு மற்றும் நிதிப் பொறுப்புச் சட்டம்

C) Revenue and Debt management / வருவாய் மற்றும் கடன் மேலாண்மை முகமை

D) Pool Account of the Centre and State of India / மத்திய மற்றும் மாநில இந்தியப் பொதுக்கணக்கு

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**48. _____ accounts for 14% of National Greenhouse Gas emissions and consumes 18% of national electricity in India**

**இந்தியாவின், _____ தேசிய பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தில் 14% பங்களிக்கிறது மற்றும் நாட்டின் மின்சார நுகர்வில் 18% ஐப் பயன்படுத்துகிறது.**

A) Agriculture Sector / விவசாய துறை

B) Industry Sector / தொழில் துறை

C) Service Sector / சேவை துறை

D) Technology / தொழில்நுட்பம்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**49. Choose the right matches among type**

**(1) Zero-Budget natural farming - Subhash Palekar**

**(2) Natural farming - Nammalvar**

**(3) One-straw revolution - Bhaskar Save**

**(4) Gandhi of natural farming - Deepak Suchde**

**பின்வருவனவற்றுள் சரியான இணைகளைத் தேர்ந்தெடுக்கவும் :**

**(1) பூஜ்ஜியச் செலவு இயற்கை வேளாண்மை - சுபாஷ் பாலேக்கர்**

**(2) இயற்கை வேளாண்மை - நம்மாழ்வார்**

**(3) ஒரு வைக்கோல் புரட்சி - பாஸ்கர் சேவ்**

**(4) இயற்கை வேளாண்மையின் காந்தி - தீபக் சச்தே**

A) (1) and (3) are correct / (1) மற்றும் (3) சரியானவை

B) (1) and (2) are correct / (1) மற்றும் (2) சரியானவை

C) (2) and (3) are correct / (2) மற்றும் (3) சரியானவை

D) (3) and (4) are correct / (3) மற்றும் (4) சரியானவை

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**50. Match the following :**

**(a) Atmanirbhar Bharat Rojgar Yojana (ABRY) - 1. 8th April, 2015**

**(b) Kousal Vikas Yojana (PMKVY) - 2. 20th June, 2020**

**(c) Pradhan Mantri Mudra Yojana (PMMY) - 3. 1st October, 2020**

**(d) Pradhan Mantri Garib Kalyan Rojgar Abhiyaan (PMGKRA) - 4. 15th July, 2015**

**பின்வருவனவற்றைப் பொருத்துக :**

**(a) ஆத்மநிர்பர் பாரத் ரோஜ்கார் யோஜனா - 1. 8 ஏப்ரல், 2015**

**(b) கௌசல் விகாஸ் யோஜனா - 2. 20 ஜூன், 2020**

**(c) பிரதான் மந்திரி முத்ரா யோஜனா - 3. 1 அக்டோபர், 2020**

**(d) பிரதான் மந்திரி கரீப் கல்யாண் ரோஜ்கார் அபியான் - 4. 15 ஜூலை, 2015**

A) 3 4 1 2

B) 1 2 3 4

C) 2 1 4 3

D) 4 2 1 3

E) Answer Not Known / விடை தெரியவில்லை

51. **Assertion [A] : The registration of births and deaths are performed in Tamil Nadu as per the registration of Births and Deaths Act 1969.**

**Reason [R] : The National Population Policy sets the goal of universal registration of all births and deaths by 2010.**

**கூற்று [A] : பிறப்பு மற்றும் இறப்பு பதிவுத் திட்டம் 1969இன்படி தமிழ்நாட்டில் பிறப்பு மற்றும் இறப்புகள் பதிவு செய்யப்படுகிறது.**

**காரணம் [R] : 2010 ஆம் ஆண்டுக்குள் அனைத்து பிறப்பு மற்றும் இறப்புகளையும் உலகளாவிய முறையில் பதிவு செய்வதை தேசிய மக்கள்தொகைத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.**

A) [A] is true but [R] is false / [A] சரி ஆனால் [R] தவறு

B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டுமே சரி மற்றும் [R] என்பது [A] க்கு சரியான விளக்கம்

C) [A] is false, [R] is true / [A] தவறு, [R] சரி

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct / [A] மற்றும் [R] இரண்டுமே சரி, ஆனால் [R] என்பது [A] க்கு சரியான விளக்கம் இல்லை என்பது சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

52. **The first National Health Policy formulated by the Government of India in the year**

**இந்திய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட முதல் தேசிய சுகாதாரக் கொள்கை எந்த ஆண்டில் வகுக்கப்பட்டது?**

A) 1953

B) 2023

C) 1993

D) 1983

E) Answer Not Known / விடை தெரியவில்லை

53. **Given below are two statements**

**Statement I : One of the major characteristics of good governance is that it is autocratic.**

**Statement II : RTI (Right to Information) is one of the tool of good Governance.**

**In the light of the above statement choose the correct answer from the option given below.**

**கீழே இரண்டு கருத்துகள் கொடுக்கப்பட்டுள்ளன.**

**கூற்று I : முதல் கூற்று நல்லாட்சியின் முக்கிய குணாதிசயங்களை அது எதேச்சதிகாரம் கொண்டது.**

**கூற்று II : தகவல் அறியும் உரிமை என்பது (RTI) நல்லாட்சிக்கான ஒரு கருவியாகும்.**

**மேலே உள்ள கூற்றின் விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன இவற்றில் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.**

A) Both Statement I and II are True / இரண்டு கூற்றும் சரியானது I மற்றும் II

B) Both Statement I and II are False / இரண்டு கூற்றும் தவறானது I மற்றும் II

C) Statement I is true but Statement II is False / கூற்று I சரியானது ஆனால் கூற்று II தவறானது

D) Statement I is false but Statement II is True / கூற்று I தவறானது ஆனால் கூற்று II சரியானது

E) Answer Not Known / விடை தெரியவில்லை

54. **Which of the following statement causes the continuation of bridge rebuilding, road repairs, and waterline repairs in India?**

**(i) Inadequate maintenance leading to ongoing repairs**

**(ii) Utility cuts and rework**

**(iii) Poor initial construction quality**

**(iv) Fair prices given to workers**

**இந்தியாவில், பாலங்களை மீண்டும் கட்டும் பணிகள், சாலை பழுதுபார்ப்பு மற்றும் குடிநீர் குழாய் பழுதுபார்ப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்குக் கீழ்க்கண்டவற்றுள் எது காரணமாக அமைகிறது?**

**(i) முறையற்ற பராமரிப்பால் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய பழுதுபார்ப்புகள்**

**(ii) பயன்பாட்டு குறைப்புகள் மற்றும் மறுவேலை**

**(iii) தொடக்க கட்ட கட்டுமானத்தின் மோசமான தரம்**

**(iv) தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியம் வழங்கப்பட்டுள்ளது**

A) (i), (ii), (iii)

B) (ii), (iii), (iv)

C) (i), (iii), (iv)

D) (i), (ii), (iv)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

55. **Jal Jeevan Mission plays an important role for _____. Choose the correct answer among the following.**

**(i) Women empowerment**

**(ii) Water supply maintenance**

**(iii) Providing adequate tap water connection**

**ஜல் ஜீவன் இயக்கத்தின் முக்கியப் பங்கு _____ பின்வருவனவற்றுள் சரியான பதிலைத் தேர்வு செய்க.**

**(i) பெண்கள் அதிகாரமளித்தல்**

**(ii) நீர் வழங்கல் பராமரிப்பு**

**(iii) போதுமான குழாய் நீர் இணைப்பு வழங்குதல்**

A) (i) only / (i) மட்டும்

B) (ii) only / (ii) மட்டும்

C) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

D) (i), (ii) and (iii) / (i), (ii) மற்றும் (iii)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

56. **The DANIDA-TNAHCP initiative of Tamil Nadu is related to which among the following sectors.**
**தமிழ்நாட்டின் DANIDA-TNAHCP முன்முயற்சி பின்வருவனவற்றில் எதனுடன் தொடர்புடையது?**
A) Health / ஆரோக்கியம்
B) Infrastructure / உள்கட்டமைப்பு
C) Industry / தொழில்
D) Education / கல்வி
E) Answer Not Known / விடை தெரியவில்லை

57. **From the following, which of the egalitarian social order lays foundation for Constitution of India?**
**(i) Abolition of untouchability**
**(ii) Protection from social injustice and exploitation**
**(iii) Prohibition of illegal migrants**
**பின்வரும் எந்தச் சமத்துவ சமூக அமைப்பு இந்திய அரசியலமைப்பிற்கு அடித்தளம் அமைக்கிறது?**
**(i) தீண்டாமை ஒழிப்பு**
**(ii) சமூக அநீதி மற்றும் சுரண்டலில் இருந்து பாதுகாப்பு**
**(iii) சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களைத் தடை செய்தல்**
A) (i) only / (i) மட்டும்
B) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்
C) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்
D) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்
E) Answer Not Known / விடை தெரியவில்லை

58. **Comparing the 14th and 15th Finance Commissions, which of the following statements are correct?**
**(i) The weightage of income distance has increased**
**(ii) The weightage of population (2011 census) has increased**
**(iii) The weightage of area has remained the same**
**பதினான்காவது மற்றும் பதினைந்தாவது நிதி ஆணையங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?**
**(i) வருமானத்திற்கான புள்ளிகள் அதிகரித்துள்ளது**
**(ii) 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கான புள்ளிகள் அதிகரித்துள்ளது**
**(iii) நிலப்பரப்பிற்கான புள்ளிகளில் மாற்றங்கள் ஏதும் இல்லை**
A) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்
B) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்
C) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்
D) (i) only / (i) மட்டும்
E) Answer Not Known / விடை தெரியவில்லை

59. **NITI Aayog _____**
**(i) is an advisory body.**
**(ii) allocate funds to the State Government.**
**(iii) has the power to impose policies.**
**(iv) appoints part-time members based on the requirements.**
**நிதி ஆயோக் என்பது _____**
**(i) ஆலோசனை அமைப்பாகும்.**
**(ii) மாநில அரசுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறது.**

**(iii) கொள்கைகளை வகுக்கும் ஆற்றல் கொண்டது.**

**(iv) தேவைகளின் அடிப்படையில் பகுதி நேர உறுப்பினர்களை நியமிக்கிறது.**

A) (i) and (ii) / (i) மற்றும் (ii)

B) (ii) and (iii) / (ii) மற்றும் (iii)

C) (ii) and (iv) / (ii) மற்றும் (iv)

D) (i) and (iv) / (i) மற்றும் (iv)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

60. **Which among the following was the important Non-Economic factor in Economic development?**
**கீழ்க்கண்டவற்றில் எந்த பொருளாதாரம் சாராதக் காரணி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது?**

A) Scarcity of Capital / மூலதனப் பற்றாக்குறை

B) Desire for development / முன்னேறும் விருப்பம்

C) Conditions in foreign trade / பன்னாட்டு வணிகநிலை

D) Economic system / பொருளாதார அமைப்பு

E) Answer Not Known / விடை தெரியவில்லை

61. **In Tamil nadu Khilafat Day was observed on**
**தமிழ்நாட்டில் கிலாபத் தினம் அனுசரிக்கப்பட்ட நாள்**

A) 17 April 1922 / 17 ஏப்ரல் 1922

B) 17 April 1921 / 17 ஏப்ரல் 1921

C) 17 April 1920 / 17 ஏப்ரல் 1920

D) 17 April 1923 / 17 ஏப்ரல் 1923

E) Answer Not Known / விடை தெரியவில்லை

62. **The Right of children to Free and Compulsory Education Act, ensures quality education to which age group?**
**குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் எந்த வயதினருக்கு தரமானக் கல்வியை உறுதி செய்கிறது?**

A) 0-5 years / 0-5 வயது

B) 5-10 years / 5-10 வயது

C) 1-5 years / 1-5 வயது

D) 6-14 years / 6-14 வயது

E) Answer Not Known / விடை தெரியவில்லை

63. **Assertion [A] : The health care system consists of a mix of both Public and Private sector in provision of various health care facilities related to preventive, curative and promotive aspects of health services.**
**Reason [R] : The key objective of the Government is to provide accessible, affordable, equitable and quality health care, especially to the marginalized and vulnerable sections of the population.**
**கூற்று [A] : சுகாதார பராமரிப்பு முறை சுகாதார சேவைகளின் தடுப்பு, குணப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு அம்சங்களுடன் தொடர்புடைய பல்வேறு சுகாதார வசதிகளை வழங்குவதில் பொது மற்றும் தனியார் துறைகளின் கூட்டு முயற்சியைக் கொண்டுள்ளது.**
**காரணம் [R] : அரசாங்கத்தின் முக்கிய நோக்கம், குறிப்பாக மக்கள் தொகையின் ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளுக்கு, அணுகக்கூடிய, மலிவு, சமமான மற்றும் தரமான சுகாதாரப் பராமரிப்பை வழங்குவதாகும்.**

A) [A] is true and [R] is false / கூற்று [A] சரி மற்றும் காரணம் [R] தவறு

B) Both [A] and [R] are true / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி

C) [A] is false and [R] is true / கூற்று [A] தவறு மற்றும் காரணம் [R] சரி

D) Both [A] and [R] are false / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் தவறு

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**64. A cash price of Rs._____ is given to each of the two College students - One male and one female - who win the 'Bharathi Young Poet Award'.**

**'பாரதி இளம் கவிஞர் விருது' பட்டத்தை வெல்லும் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் கல்லூரி மாணவருக்கு தலா ரூ. _____ ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது.**

A) Rs. 25,000 / ரூ. 25,000

B) Rs. 50,000 / ரூ. 50,000

C) Rs. 75,000 / ரூ. 75,000

D) Rs. One lakh / ரூ. ஒரு லட்சம்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**65. What is the Act of the Indian Constitution that has special provisions for the socio-economic development of SCs, STs and OBCs?**

**SC, ST, OBC களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கான சிறப்பு ஏற்பாடுகளைக் கொண்ட இந்திய அரசியலமைப்பின் சட்டம் எது?**

A) Article 220-225 of Part XVI / ஷரத்து 220-225; பகுதி 16

B) Article 114-120 of Part XVI / ஷரத்து 114-120; பகுதி 16

C) Article 330-342 of Part XVI / ஷரத்து 330-342; பகுதி 16

D) Article 350-355 of Part XVI / ஷரத்து 350-355; பகுதி 16

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**66. In Tamilnadu Chief Minister's Girl child protection scheme was introduced in the year _____**

**தமிழ்நாட்டு முதலமைச்சர் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு _____ ஆகும்.**

A) 1990

B) 1991

C) 1992

D) 1993

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**67. Arrange the following in chronological order :**

**(1) Kudiyarasu Tamil weekly was started by Thanthai Periyar**

**(2) System of Devadasi was abolished by an Act.**

**(3) Staff Selection Board was established by Justice Party.**

**(4) Ramalinga adigal was born near Chidambaram.**

**பின்வருவனவற்றைக் காலவரிசைப்படி வரிசைப்படுத்துங்கள் :**

**(1) குடியரசு தமிழ் வார இதழ் தந்தை பெரியாரால் தொடங்கப்பட்டது.**

**(2) தேவதாசி முறை ஒரு சட்டத்தால் ஒழிக்கப்பட்டது.**

**(3) பணியாளர் தேர்வு வாரியம் நீதிக்கட்சியால் நிறுவப்பட்டது.**

**(4) இராமலிங்க அடிகள் சிதம்பரம் அருகே பிறந்தவர்.**

A) (4), (3), (2), (1)

B) (4), (2), (1), (3)

C) (4), (1), (2), (3)

D) (4), (3), (1), (2)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**68. Match correctly the following tourist spots with their corresponding locations :**

**(a) Adavinainar Dam - 1. Kadayam village**

**(b) Ramanadhi Dam - 2. Kolli hills**

**(c) Agasthiar falls - 3. Mekkarai village**

**(d) Puliancholai - 4. Papanasam**

**பின்வரும் சுற்றுலாத் தலங்களை அவற்றின் உரிய இடங்களுடன் சரியாகப் பொருத்தவும் :**

**(a) அடவிநயினார் அணை - 1. கடையம் கிராமம்**

**(b) ராமநதி அணை - 2. கொல்லிமலை**

**(c) அகஸ்தியர் அருவி - 3. மேக்கரை கிராமம்**

**(d) புளியஞ்சோலை - 4. பாபநாசம்**

A) 3 4 1 2

B) 3 2 1 4

C) 3 1 2 4

D) 3 1 4 2

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**69. South Indian Liberal Federation came into existence in the year 1917 mainly for the _____ of non-Brahmins.**

**தென்னிந்திய தாராளவாத கூட்டமைப்பு 1917-ஆம் ஆண்டு பிராமணர் அல்லாதவர்களுக்காக _____ என்ற நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.**

A) Social Advancement / சமூக முன்னேற்றம்

B) Economic Advancement / பொருளாதார முன்னேற்றம்

C) Cultural Advancement / கலாச்சார முன்னேற்றம்

D) Political Advancement / அரசியல் முன்னேற்றம்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**70. How death has been compared by Valluvar?**

**(i) Sleep**

**(ii) Meditation**

**(iii) Wisdom**

**(iv) Wake up**

**சாக்காடு என்பதை வள்ளுவர் எதனோடு ஒப்பிடுகிறார்?**

**(i) உறக்கம்**

**(ii) தியானம்**

**(iii) ஞானம்**

**(iv) விழிப்பு**

A) (i) only / (i) மட்டும்

B) (ii) and (iii) / (ii) மற்றும் (iii)

C) (iii) and (iv) / (iii) மற்றும் (iv)

D) (iv) only / (iv) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

71. **Assertion [A] : The more good things we hear the more noble we turn.**

**Reason [R] : Listening skill/sense is subtler than any other sense. For effective education listening skill is the most effective.**

**கூற்று [A] : எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் (எத்துணை நல்லவற்றை நாம் கேட்கிறோமோ அத்துணை சிறப்புகள் நம்மைச் சேரும்).**

**காரணம் [R] : செவியறிவு என்பது மற்ற புலனறிவினை விட நுண்ணியது ஆகும். கற்றலில் கேட்டல் என்பது மிகச் சிறப்புடையதாக அமைகிறது.**

A) [A] is true but [R] is false / [A] சரி ஆனால் [R] தவறு

B) [A] is false but [R] is true / [A] தவறு ஆனால் [R] சரி

C) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரி, மற்றும் [R] என்பது [A] விற்கு சரியான விளக்கமாகும்.

D) Both [A] and [R] are true, and [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரி, மற்றும் [R] என்பது [A] விற்கு சரியான விளக்கமல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

72. **Match the following :**

**(a) Azhagar Kovil - 1. Paddy Pot**

**(b) Keezhadi - 2. School of Samanam**

**(c) Porunthal - 3. Footprint of a dog**

**(d) Adichanallur - 4. Mudumakkal Thazhi**

**சரியான இணையுடன் பொருத்துக :**

**(a) அழகர் கோவில் - 1. நெல் பானை**

**(b) கீழடி - 2. சமணப் பள்ளி**

**(c) பொருந்தல் - 3. நாயின் காற்தடம்**

**(d) ஆதிச்சநல்லூர் - 4. முதுமக்கள் தாழி**

A) 1 3 2 4

B) 4 2 3 1

C) 2 3 1 4

D) 1 4 2 3

E) Answer Not Known / விடை தெரியவில்லை

73. **Among the following Congress Leaders who stated that "servants of people society was in reality a Hindu Reform Movement"?**

**பின்வரும் காங்கிரஸ் தலைவர்களில் யார் "மக்கள் சேவகர்கள் சமுதாயம் உண்மையில் ஒரு இந்து சீர்திருத்த இயக்கமாக இருந்தது" என்று கூறினார்.**

A) Madan Mohan Malviya / மதன் மோகன் மாளவியா

B) Lala Lajpat Rai / லாலா லஜ்பத் ராய்

C) Bal Gangadhar Tilak / பால கங்காதர திலகர்

D) Gopala Krishna Gokhale / கோபால கிருஷ்ண கோகலே

E) Answer Not Known / விடை தெரியவில்லை

74. **Which of the following statements are true about Perarignar Anna?**

**(i) He supported Hindu Dharma principles.**

**(ii) He protested against the atrocities done in the name of religion.**

**(iii) He opposed the domination of Brahmins.**

**கீழே கொடுக்கப்பட்டவற்றில் பேரறிஞர் அண்ணா பற்றிய சரியான பதிலை தேர்ந்தெடுக்க.**

**(i) பேரறிஞர் அண்ணா, ஹிந்து தர்ம கொள்கைகளை ஆதரித்தார்.**

**(ii) மதம் பெயரில் கொடுமைகள் நடப்பதை எதிர்த்தார்.**

**(iii) பிராமணர்களின் ஆதிக்கத்தை எதிர்த்தார்.**

A) (i) only / (i) மட்டும்

B) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

C) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

D) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

75. **Reason and Assertion type :**

**Assertion [A] : By a proclamation, Governor James Hope, government abolished the teaching of Hindi as a compulsory subject and released demonstrators from prisons.**

**Reason [R] : In the cause of the agitation 1,200 were jailed, Natarajan and Talamuthu died of police torture and the movement continued till 1939.**

**கூற்று மற்றும் விளக்கம் வகை :**

**கூற்று [A] : கவர்னர் ஜேம்ஸ் ஹோப்பின் பிரகடனத்தின் மூலம், அரசாங்கம் இந்தி கட்டாயமாக கற்பிப்பதை ஒழித்து, ஆர்ப்பாட்டக்காரர்களை சிறையில் இருந்து விடுவித்தது.**

**விளக்கம் [R] : இந்த கிளர்ச்சியின் காரணமாக 1,200 பேர் கைது செய்யப்பட்டு, நடராஜனும் தாளமுத்துவும் கைது செய்யப்பட்டு, சிறைச்சாலையிலே காவல் துறையினரின் கொடுமையால் இறந்து போனார்கள் மற்றும் இந்த கிளர்ச்சி 1939 வரை நீடித்தது.**

A) [A] is true but [R] is false / [A] சரி, ஆனால் [R] தவறு

B) [A] is false but [R] is true / [A] தவறு, ஆனால் [R] சரி

C) [A] and [R] are true and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] சரி, மேலும் [R], [A]-விற்கான சரியான விளக்கம்

D) [A] and [R] are true and [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] சரி, மேலும் [R] [A]-விற்கான சரியான விளக்கமல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

76. **Arrange the following events in chronological order.**

**(1) Dr. Subbarayan's Independent Cabinet.**

**(2) Origin of Dravidian League.**

**(3) First Conference of Self Respect Movement.**

**(4) Conference of Non-Brahmins held in Madurai.**

**பின்வரும் நிகழ்வுகளை காலவரிசைப்படி ஒழுங்கமைக்கவும் :**

**(1) டாக்டர். சுப்பராயனின் சுயேட்சை அமைச்சரவை.**

**(2) திராவிடர் கழகத்தின் தோற்றம்.**

**(3) சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாடு.**

**(4) மதுரையில் நிகழ்ந்த பிராமணர் அல்லாதோர் மாநாடு.**

A) (2), (3), (1), (4)

B) (1), (2), (4), (3)

C) (4), (3), (2), (1)

D) (1), (4), (3), (2)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

77. **Reason and Assertion type :**

**Assertion [A] : Indian National Congress Party dubbed Sir. Pitti Theagaraya as an Anti-National.**

**Reason [R] : He issued the Non-Brahmin Manifesto.**

**கூற்று மற்றும் காரணம் வகை :**

**கூற்று [A] : இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சர். பிட்டி தியாகராயரை தேச-விரோதி என அழைத்தது.**

**காரணம் [R] : அவர் பிராமணர் அல்லாதோர் கொள்கை விளக்க அறிவிப்பை வெளியிட்டார்.**

A) [A] is true but [R] is false / கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு

B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A] / [A] கூற்றும், [R] காரணமும் சரி, மற்றும் காரணம் [R], கூற்று [A]-க்கான சரியான விளக்கம்

C) [A] is false, [R] is true / கூற்று [A] தவறு, காரணம் [R] சரி

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / [A] கூற்றும் [R] காரணமும் சரி, ஆனால் காரணம் [R], கூற்று [A]-க்கான சரியான விளக்கமல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

78. **Arranging Chronological Order/Event Type :**

**(1) The Madras Hindu Widow Marriage Association.**

**(2) The Hindu Women's Remarriage Association.**

**(3) Widow Remarriage Act XV.**

**(4) Widow Remarriage Society.**

**பின்வரும் நிகழ்வுகளை காலவரிசைப்படி ஒழுங்கமைக்கவும் :**

**(1) மெட்ராஸ் இந்து விதவைகள் திருமண சங்கம்.**

**(2) இந்து பெண்களின் மறுமண சங்கம்.**

**(3) பதினைந்தாவது விதவைகள் மறுமண சட்டம்.**

**(4) விதவைகள் மறுமண சங்கம்.**

A) (1), (2), (3), (4)

B) (3), (4), (1), (2)

C) (4), (3), (2), (1)

D) (2), (3), (1), (4)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

79. **Choose the right matches among type :**

**(1) The Samarasa Suddha Sanmargha Sathiya Sangam - 1865**

**(2) The Sathiya Dharumasalai - 1867**

**(3) The Sathiya Gnana Sabai - 1874**

**(4) Samarasa Veda Padasalai - 1875**

**சரியான பொருத்தத்தை தேர்வு செய்க :**

**(1) சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் - 1865**

**(2) சத்திய தருமசாலை - 1867**

**(3) சத்திய ஞான சபை - 1874**

**(4) சமரச வேத பாடசாலை - 1875**

A) (1) and (3) are correct / (1) மற்றும் (3) சரி

B) (1) and (2) are correct / (1) மற்றும் (2) சரி

C) (2) and (3) are correct / (2) மற்றும் (3) சரி

D) (3) and (4) are correct / (3) மற்றும் (4) சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**80. Which among the following statements are true in connection with the Vellore Revolt?**

**(I) The Vellore Revolt was held in 1801.**

**(II) The family members of Tipu were imprisoned at Vellore Fort after the Fourth Mysore War.**

**(III) At the time of Vellore Revolt, the Governor of Madras was Lord William Bentinck.**

**(IV) The Victory of Revolt of Vellore against British was one of the significant event in the history of India.**

**வேலூர் கிளர்ச்சி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?**

**(I) வேலூர் கிளர்ச்சி 1801 இல் நடைபெற்றது.**

**(II) நான்காம் மைசூர் போருக்குப் பிறகு திப்புவின் குடும்ப உறுப்பினர்கள் வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர்.**

**(III) வேலூர் கிளர்ச்சியின் போது மெட்ராஸ் கவர்னராக இருந்தவர் வில்லியம் பெண்டிக் பிரபு.**

**(IV) ஆங்கிலேயருக்கு எதிராக வேலூர் கிளர்ச்சி பெற்ற வெற்றி இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளில் ஒன்றாகும்.**

A) (I) and (II) are correct / (I) மற்றும் (II) ஆகியவை சரி

B) (II) and (IV) are correct / (II) மற்றும் (IV) ஆகியவை சரி

C) (II) and (III) are correct / (II) மற்றும் (III) ஆகியவை சரி

D) (I), (II) and (IV) are correct / (I), (II) மற்றும் (IV) ஆகியவை சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**81. Which of the following statements are true about the salient features of Gupta sculpture?**

**(i) The statues of the Gupta period had curly hair.**

**(ii) The Gupta sculptures had foreign influences.**

**(iii) The aim of the Gupta sculpture was to represent the spiritual ideas.**

**குப்தா சிற்பத்தின் முக்கிய அம்சங்களைப் பற்றி பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானது?**

**(i) குப்தர் காலத்துச் சிலைகள் சுருள் முடியைக் கொண்டிருந்தன.**

**(ii) குப்தர் சிற்பங்களில் வெளிநாட்டு தாக்கம் இருந்தன.**

**(iii) குப்தர் சிற்பத்தின் நோக்கம் ஆன்மீக கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகும்.**

A) (ii) only / (ii) மட்டும்

B) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

C) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

D) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**82. Which of the following statements are true about 'Porunai'?**

**(i) India's First Excavation Research.**

**(ii) 'Porunai' situated in Tanjoor District.**

**(iii) Dr. Jakore discovered Porunai Research.**

**(iv) This Excavation Research started in the year 1896.**

**பின்வரும் கூற்றுகளில் 'பொருநை' குறித்த சரியான விடையைக் கூறுக.**

**(i) இந்தியாவில் நடைபெற்ற அகழாய்வுகளில் முதலானது ஆகும்.**

**(ii) 'பொருநை' தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.**

**(iii) முனைவர் ஜாகோர் என்பவர் முதன்முதலில் ஆய்விற்குத் திட்டமிட்டார்.**

**(iv) இந்த அகழாய்வு கி.பி. 1896 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.**

A) (i) and (iii) only correct / (i) மற்றும் (iii) சரி

B) (ii) and (iv) only correct / (ii) மற்றும் (iv) சரி

C) (i) only correct / (i) மட்டும் சரி

D) (ii) only correct / (ii) மட்டும் சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

83. **Aavirkku Neerendru Irappinum _____ _____ _____ Ill.**

**What is the message got through this Kural?**

**(1) Do not do charity by begging, try and work hard and do charity.**

**(2) It is a virtue to live without hurting other beings.**

**(3) Showing kindness and compassion to other beings.**

**(4) Charity is to give unto those who are really in need.**

**ஆவிற்கு நீரென்று இரப்பினும் _____. _____ _____ இல்.**

**என்னும் குறள் மூலம் பெறப்படும் செய்தி :**

**(1) பிச்சை எடுத்து அறம் செய்யாதே; முயன்று அறம் செய்.**

**(2) பிற உயிர்களை வருத்தாது வாழ்வது அறம்.**

**(3) பிற உயிர்களிடம் இரக்கம் கொள்வது அறம்.**

**(4) வறுமையில் இருப்போருக்குக் கொடுப்பதே ஈகை.**

A) (1) is correct / (1) மட்டும் சரி

B) (2) and (3) are correct / (2) மற்றும் (3) சரி

C) (3) is correct / (3) மட்டும் சரி

D) (4) is correct / (4) மட்டும் சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

84. **"Thiran Therinthu Therapadum"... Thirukkural talks about**

**"திறந் தெரிந்து தேறப்படும்" எனத் திருக்குறள் கூறுவது**

A) Aram, Porul, Inbam, Veeduperu / அறம், பொருள், இன்பம், வீடுபேறு

B) Aram, Porul, Inbam, Uyiracham / அறம், பொருள், இன்பம், உயிரெச்சம்

C) Aram, Porul, Veeduperu, Kamam / அறம், பொருள், வீடுபேறு, காமம்

D) Thuravu, Aram, Porul, Inbam / துறவு, அறம், பொருள், இன்பம்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

85. **Which is the part in Kalithogai that talks about taming bulls?**

**(1) Paalai Kali**

**(2) Kurinji Kali**

**(3) Mullai Kali**

**(4) Marutha Kali**

**கலித்தொகையில் ஏறுதழுவுதலைப் பற்றிய செய்திகளைக் குறிப்பிடும் பகுதி.**

**(1). பாலைக் கலி**

**(2) குறிஞ்சிக் கலி**

**(3) முல்லைக் கலி**

**(4) மருதக் கலி**

A) (1) and (2) correct / (1) மற்றும் (2) சரி

B) (2) and (4) correct / (2) மற்றும் (4) சரி

C) Only (3) correct / (3) மட்டும் சரி

D) Only (4) correct / (4) மட்டும் சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**86. Who hailed Kalingathu Barani as "Thenthamizh Deiva Bharani"?**

**கலிங்கத்துப்பரணியைத் "தென்தமிழ் தெய்வப்பரணி" என்று சிறப்பித்தவர்?**

A) Kambar / கம்பர்

B) Avvaiyaar / ஔவையார்

C) Ottakkooththar / ஒட்டக்கூத்தர்

D) Pugazhendhi Pulavar / புகழேந்திப் புலவர்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**87. Which of the following statements are true about palm leaves?**

**(i) When writing on palm leaves, it is not customary to place a dot over consonants or a full stop at the end of a sentence.**

**(ii) In inscriptions, a full stop is usually placed at the end of sentence.**

**(iii) On some palm leaves, a vertical line is used to indicate the end of a sentence instead of a full stop.**

**ஓலைச் சுவடிகள் குறித்த பின்வரும் கூற்றுகளில் எவை உண்மையானவை?**

**(i) பனை ஓலைகளில் எழுதும்போது மெய்யெழுத்திற்கு மேல் புள்ளியிடுவதும் வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி இடுவதும் வழக்கில் இல்லை.**

**(ii) கல்வெட்டுகளில் பொதுவாக வாக்கியங்களின் இறுதியில் முற்றுப்புள்ளி இடப்படும்.**

**(iii) சில ஓலை ஆவணங்களில் வாக்கியத்தின் முடிவைக் காட்டுவதற்கு முற்றுப்புள்ளி இடுவதற்குப் பதிலாக செங்குத்துக் கோடு பயன்படுத்தப்படுகிறது.**

A) (i) only / (i) மட்டும்

B) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

C) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

D) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**88. Nandi Kalambagam Manda Kadhai Nadu ariyum**

**Where was the line taken from and who was the author of this poem?**

**நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும் -**

**இவ்வடி இடம்பெற்ற நூல் எது? பாடிய ஆசிரியர் யார்?**

A) Nandi Kalambagam - Author unknown / நந்திக்கலம்பகம் - ஆசிரியர் தெரியவில்லை

B) Moodhumozhi Venba - Somaicher / முதுமொழி வெண்பா - சோமேசர்

C) Deiva ula - Seraman Perumal Nayanar / தெய்வ உலா - சேரமான் பெருமாள் நாயனார்

D) Thondar Artrupadai - R. Elangkumaran / தொண்டர் ஆற்றுப்படை - இரா. இளங்குமரன்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**89. Reason and Assertion type :**

**Assertion [A] : The increase in the consumption of Iron caused an increase in the iron production leading to the development of manufacturing industry which rose to the next level.**

**Reason [R] : This led to the emergence of various groups in the structure of society and the formation of states such as Kings, Vassals and Governors.**

**கூற்று மற்றும் காரணம் வகை :**

**கூற்று [A] : இரும்பின் பயன்பாட்டினால் ஏற்பட்ட உற்பத்திப் பெருக்கம் மற்றும் உபரி உற்பத்தி சமூகத்தினை பல்வேறு வளர்ச்சி நிலைக்கு எடுத்துச் சென்றது.**

**காரணம் [R] : இது சமூகத்தின் கட்டமைப்பில் பல்வேறு குழுக்களின் எழுச்சிக்கும் மன்னர், வேளிர், வேந்தர் போன்ற அரச உருவாக்கத்திற்கு அடி கோலியது.**

A) [A] is true but [R] is false / [A] சரி, ஆனால் [R] தவறு

B) [A] is false, [R] is true / [A] தவறு, [R] சரி

C) [A] is true, [R] is true / [A] சரி, [R] சரி

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct. / [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [A] சரி என்பதற்கு [R] சரியான விளக்கமல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

90. **The dimension of a brick are 24 cm × 12 cm × 8 cm. How many such bricks will be required to build a wall of 20 m length, 48 cm breadth and 6 m height?**

**ஒரு செங்கல்லின் அளவுகள் 24 செமீ × 12 செமீ × 8 செமீ ஆகும். 20 மீ நீளம், 48 செமீ அகலம் மற்றும் 6 மீ உயரம் உள்ள ஒரு சுவர் எழுப்புவதற்கு இதுபோன்ற எத்தனை செங்கற்கள் தேவை?**

A) 22000

B) 21000

C) 23000

D) 25000

E) Answer Not Known / விடை தெரியவில்லை

91. **Find the difference in compound interest and simple interest for principal 8000 and the rate 5% in 3 years.**

**அசல் 8000, ஆண்டு வட்டி விகிதம் r = 5% மற்றும் 3 ஆண்டுகளுக்கு கிடைக்கும் கூட்டு வட்டிக்கும், தனி வட்டிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை காண்க.**

A) Rs. 12 / ரூ. 12

B) Rs. 20 / ரூ. 20

C) Rs. 61 / ரூ. 61

D) Rs. 51 / ரூ. 51

E) Answer Not Known / விடை தெரியவில்லை

92. **Divya bought Rs. 30,000 from a bank to buy a car at 20% simple interest. If she paid Rs. 18,000 as interest while clearing the loan, find the time for which the loan was given.**

**திவ்யா என்பவர் மகிழுந்து வாங்குவதற்காக ரூ. 30,000 ஐ 20% தனி வட்டி என்ற வீதத்தில் கடனாகப் பெற்றார். அவர் ரூ. 18,000 ஐக் கடனை முடிக்கும் தருவாயில் வட்டியாக செலுத்தினார் எனில் கடனைப் பயன்படுத்திய காலத்தைக் கணக்கிடுக.**

A) 6 years / 6 வருடம்

B) 5 years / 5 வருடம்

C) 4 years / 4 வருடம்

D) 3 years / 3 வருடம்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

93. **A, B, C took a house on rent for one year for Rs.13,824. They remained together for 4 months and then C left the house. After 5 more months, B also left the house. Then how much rent should 'B' pay?**

**A, B மற்றும் C ஆகியோர் ஒரு வீட்டினை ரூ. 13,824 ஆண்டு வாடகைக்கு எடுக்கின்றனர். அவர்கள் 4 மாதத்திற்கு ஒன்றாக இருக்கின்றனர். பின் 'C' வீட்டை விட்டு வெளியேறி விடுகிறார். அதன் பிறகு 5**

**மாதம் கழித்து B யும் வீட்டை விட்டு வெளியேறி விடுகிறார், எனில் B செலுத்த வேண்டிய வாடகைத் தொகை எவ்வளவு?**

A) Rs. 3,456 / ரூ. 3,456

B) Rs. 7,872 / ரூ. 7,872

C) Rs. 4,416 / ரூ. 4,416

D) Rs. 1,536 / ரூ. 1,536

E) Answer Not Known / விடை தெரியவில்லை

94. **HCF of $x^{a+9}$, $x^{a+7}$, $x^{a+5}$ is _____.**

**$x^{a+9}$, $x^{a+7}$, $x^{a+5}$ ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தி _____.**

A) $x^a$

B) $x^{a+9}$

C) $x^{a+7}$

D) $x^{a+5}$

E) Answer Not Known / விடை தெரியவில்லை

95. **The income of a person is increased by 20% and then decreased by 20%. Then the change in his income is _____.**

**ஒரு நபரின் வருமானம் 20% அதிகரிக்கப்பட்டு பிறகு 20% குறைக்கப்படுகிறது எனில் அவருடைய வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தைக் காண்க.**

A) 1% increase / 1% அதிகரிப்பு

B) 3% decrease / 3% குறைவு

C) 5% increase / 5% அதிகரிப்பு

D) 4% decrease / 4% குறைவு

E) Answer Not Known / விடை தெரியவில்லை

96. **The difference between the 13th and 12th Fibonacci number is _____ (if the first two numbers are $F_1 = 1$, $F_2 = 1$).**

**13வது மற்றும் 12வது பிபனோசி எண்களுக்கு இடையே உள்ள வித்தியாசம் ($F_1 = 1$, $F_2 = 1$ ஆகியவை முதலிரண்டு எண்கள் எனில்)**

A) 144

B) 89

C) 55

D) 34

E) Answer Not Known / விடை தெரியவில்லை

97. **In an A.P, $S_1$, $S_2$, $S_3$ are sum of first 15, 30, 45 terms respectively. If $S_3 = 300$, $S_2 = 150$ find $S_1$.**

**ஒரு கூட்டுத்தொடரில் முதல் 15, 30, 45 உறுப்புகளின் கூடுதல் முறையே $S_1$, $S_2$, $S_3$ என குறிக்கப்படுகிறது. $S_3 = 300$, $S_2 = 150$ எனில் $S_1$ ஐ காண்க.**

A) 150

B) 100



C) 50



D) 30

E) Answer Not Known / விடை தெரியவில்லை

98. **How many dots are there on the dice face opposite to the dice face with three dots?**

**3 புள்ளிகள் கொண்ட பக்கத்திற்கு எதிரே உள்ள பகடைப் பக்கத்தில் எத்தனை புள்ளிகள் இருக்கும்?**

(i)  (ii) 

(iii)  (iv) 

A) 2

B) 4

C) 5

D) 6

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**99. Fill in the blanks :**

**197 T 99, 226 S 120, 257 R 143, _____, 325 P 195.**

**விடுபட்ட இடத்தை நிரப்புக :**

**197 T 99, 226 S 120, 257 R 143, _____, 325 P 195.**

A) 225 Q 169

B) 289 Q 169

C) 290 Q 168

D) 290 Q 169

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**100. There are 7 persons (i.e.) A, B, C, D, E, F, G. They play different games (i.e.) Cricket, Football, Hockey, Tennis, Basketball, Volleyball and Chess but not necessary in the same order. D plays Tennis, Neither A nor F plays Cricket. B plays Volleyball, C does not plays Cricket and Basketball. G plays Football. A does not play basketball and Hockey. Then A plays which game?**

**7 நபர்கள் உள்ளனர் அவர்கள் A, B, C, D, E, F, G. அவர்கள் ஒவ்வொருவரும் வேறுவேறு விளையாட்டுகள் விளையாடுவார்கள். அவர்கள் விளையாடும் விளையாட்டுகள் கிரிக்கெட், கால்பந்து, ஹாக்கி, டென்னிஸ், கூடைபந்து, கைப்பந்து, (சதுரங்கம்) செஸ், ஆனால் இவை அவர்கள் வரிசைப்படி இல்லை. D டென்னிஸ் விளையாடுகிறார். A மற்றும் F கிரிக்கெட் விளையாடுவது இல்லை. B கைப்பந்து விளையாடுகிறார். C-கிரிக்கெட் மற்றும் கூடைப்பந்து விளையாடமாட்டார். G கால்பந்து விளையாடுவார். A கூடைப்பந்து மற்றும் ஹாக்கி விளையாடமாட்டார் எனில், A என்ன விளையாட்டு விளையாடுவார்?**

A) Volley ball / கைப்பந்து

B) Chess / செஸ்/சதுரங்கம்

C) Tennis / டென்னிஸ்

D) Hockey / ஹாக்கி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

101. **(i) All jasmine in the garden are white.**

**(ii) Some flowers are jasmine.**

**(iii) All flowers in the garden are not white.**

**If the first two statements are true, the third statement is**

**(i) தோட்டத்திலுள்ள அனைத்து மல்லிகைப் பூக்களும் வெண்மையானவை.**

**(ii) சில பூக்கள் மல்லிகையாகும்.**

**(iii) தோட்டத்திலுள்ள அனைத்து பூக்களும் வெண்மையானவை அல்ல.**

**முதல் இரண்டு கூற்றுகள் உண்மையாக இருந்தால், மூன்றாவது கூற்று**

A) True / சரி

B) False / தவறு

C) Uncertain / நிச்சயமற்றது

D) None of the above / மேலே உள்ள எதுவும் இல்லை

E) Answer Not Known / விடை தெரியவில்லை

102. **Choose the correct statement from the following.**

**(i) The flavour in yogurt is due to acetaldehyde.**

**(ii) Yogurt is produced by bacterial fermentation of milk.**

**(iii) Penicillin is produced by bacteria.**

**(iv) Spirulina is a non edible unicellular microorganism.**

**இவற்றில் சரியான கூற்றினை தேர்ந்தெடுக்கவும்.**

**(i) யோகர்டின் சுவைக்கு அதில் உள்ள அசிட்டால்டிஹைட் காரணமாகும்.**

**(ii) பாலில் இருந்து யோகர்ட் பாக்டீரியா நொதித்தல் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றது.**

**(iii) பாக்டீரியா பென்சிலின் உற்பத்தி செய்கின்றது.**

**(iv) ஸ்பைருலினா ஒற்றை செல் நுண்ணுயிரி உண்பதற்கு ஏற்றவை அல்ல.**

A) (i) and (ii) are correct / (i) மற்றும் (ii) சரியானவை

B) (iii) and (iv) are correct / (iii) மற்றும் (iv) சரியானவை

C) (ii) and (iii) are correct / (ii) மற்றும் (iii) சரியானவை

D) (i) and (iv) are correct / (i) மற்றும் (iv) சரியானவை

E) Answer Not Known / விடை தெரியவில்லை

103. **What is the major environmental advantage in using Chitosan - encapsulated nano-urea over conventional urea?**

**சாதாரண யூரியாவிற்குப் பதிலாக கைட்டோசான் பூசப்பட்ட நானோ-யூரியாவைப் பயன்படுத்துவதில் உள்ள முக்கியச் சுற்றுச்சூழல் நன்மை என்ன?**

A) It helps in maintenance of soil pH. / இது மண்ணின் pH அளவை பராமரிக்க உதவுகிறது.

B) It provides drought tolerance to the crops. / இது பயிர்களுக்கு வறட்சி தாங்கும் தன்மையை அளிக்கிறது.

C) It drastically reduce ground water contamination caused by nitrate leaching. / இது நைட்ரேட் கசிந்தோடல் மூலம் ஏற்படும் நிலத்தடி நீர் மாசுபாட்டை பெருமளவில் குறைக்கிறது.

D) It speeds up the green house gas emissions from the soil. / இது மண்ணிலிருந்து பசுமை இல்ல வாயுக்களின் வெளிப்பாட்டை வேகப்படுத்துகிறது.

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**104. The Indian Institute of Technology - Madras has developed a technology called AMRIT. This technology is integrated into the "Jal Jeevan Mission" to provide a highly effective solution for**
**இந்திய தொழில்நுட்பக் கழகம் - சென்னை, 'AMRIT' என்ற தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது. இந்த தொழில்நுட்பம் கீழ்கண்ட எந்த தீர்வை வழங்குவதற்காக 'ஜல் ஜீவன் இயக்கத்தில்' ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது?**

A) the desalination of sea water / கடல்நீரை நன்னீராக்குதல்

B) the removal of arsenic and heavy metals from water using nano technology / நானோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நீரிலிருந்து ஆர்சனிக் மற்றும் கன உலோகங்களை நீக்குதல்

C) the water softening process / நீரின் கடினத்தன்மையைக் குறைக்கும் செயல்முறை

D) increasing the ground-water level / நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துதல்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**105. Who was the first Indian Astronaut to visit the International space station?**
**சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு சென்ற முதல் இந்திய விண்வெளி வீரர் யார்?**

A) Sunita Williams / சுனிதா வில்லியம்ஸ்

B) Barry Wilmore / பேரி வில்மோர்

C) Nick Hague / நிக் ஹேக்

D) Shubhanshu Shukla / சுபான்ஷு ஷுக்லா

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**106. Which laboratory of NASA is used to study Quantum Physics in Microgravity?**
**நாசாவின் எந்த ஆய்வகம் நுண்ஈர்ப்பு விசையில் குவாண்டம் இயற்பியலைக் கற்க பயன்படுகிறது?**

A) Jet Propulsion laboratory / ஜெட் உந்துவிசை ஆய்வகம்

B) Cold atom laboratory / குளிர் அணு ஆய்வகம்

C) Space radiation laboratory / விண்வெளி கதிர்வீச்சு ஆய்வகம்

D) Johnson space center / ஜான்சன் விண்வெளி ஆய்வகம்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**107. One of the following is true about the Reservoirs and Source river.**

**(i) Tehri on the River Bhagirathi.**

**(ii) Rajghat on the Betwa.**

**(iii) Dudhganga on the Godavari.**

**கீழே குறிப்பிடப்பட்டுள்ள நீர்த்தேக்கங்கள் மற்றும் தொடர்புடைய நதிகள் குறித்த சரியான கூற்றுக்கள் எவை?**

**(i) டெக்ரி நீர்த்தேக்கம் - பாகீரதி நதி.**

**(ii) ராஜ்காட் நீர்த்தேக்கம் பெட்வா நதி.**

**(iii) தூத்கங்கா நீர்தேக்கம் - கோதவரியாறு.**

A) (i) only / (i) மட்டும்

B) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

C) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

D) (ii) only / (ii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**108. According to the 2011 census, which district in Tamilnadu records the lowest literacy rate?**
**2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் எந்த மாவட்டம் குறைந்த கல்வியறிவு பெற்ற மாவட்டமாகப் பதிவாகியுள்ளது?**

A) Dharmapuri / தருமபுரி

B) Namakkal / நாமக்கல்

C) Ariyalur / அரியலூர்

D) Krishnagiri / கிருஷ்ணகிரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

109. **Buckingham canal connects the following two states.**

**பக்கிங்ஹாம் கால்வாய் பின்வரும் இரு மாநிலங்களை இணைக்கின்றது.**

A) Telungana and Tamil Nadu / தெலுங்கானா மற்றும் தமிழ்நாடு

B) Andhra Pradesh and Tamil Nadu / ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு

C) Odisha and Andhra Pradesh / ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம்

D) Odisha and Telungana / ஒடிசா மற்றும் தெலுங்கானா

E) Answer Not Known / விடை தெரியவில்லை

110. **Which of the following infrastructure components are included in the Zojila Tunnel Project?**

**(1) Snow galleries**

**(2) Avalanche protection structures**

**(3) Bi-directional horse shoe passage**

**(4) Inland waterways**

**பின்வருவனவற்றுள் சோஜிலா சுரங்கப்பாதை திட்டத்தில் அடங்கியுள்ள உள்கட்டமைப்புக் கூறுகள் எவை?**

**(1) பனி வழிப்பாதைகள்**

**(2) பனிச்சரிவு பாதுகாப்புக் கட்டமைப்புகள்**

**(3) இருவழி குதிரை லாட வடிவப்பாதை**

**(4) உள்நாட்டு நீர்வழிகள்**

A) (2) and (4) only / (2) மற்றும் (4) மட்டும்

B) (1), (2) and (3) only / (1), (2) மற்றும் (3) மட்டும்

C) (1) and (4) only / (1) மற்றும் (4) மட்டும்

D) (1), (2) and (4) only / (1), (2) மற்றும் (4) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

111. **Assertion [A] : Tamilnadu state climate change knowledge management cell helps in developing climate adaptation strategies and supports decision - making processes.**

**Reason [R] : It provides climate vulnerability assessments climate knowledge portals and sector-wise information on climate change impacts.**

**கூற்று [A] : தமிழ்நாடு மாநில காலநிலை மாற்ற அறிவு மேலாண்மை மையம், காலநிலை மாற்றத்திற்கான தழுவல் உத்திகளை உருவாக்குவதற்கும், முடிவெடுக்கும் செயல்முறைகளுக்கும் உதவுகிறது.**

**காரணம் [R] : இது காலநிலை பாதிப்பு மதிப்பீடுகள், காலநிலை அறிவு இணையதளம் மற்றும் காலநிலை மாற்ற தாக்கங்கள் குறித்த துறைவாரியான தகவல்களை வழங்குகிறது.**

A) [A] is true but [R] is false / [A] சரி ஆனால் [R] தவறு

B) [A] is false but [R] is true / [A] தவறு ஆனால் [R] சரி

C) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டுமே சரி, மேலும் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கம் ஆகும்

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டுமே சரி, ஆனால் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கம் அல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

112. **Match the following :**

**(a) Veerashaivam - 1. Ramanujar**

**(b) Visistadavaitham - 2. Kumarila Bhatta**

**(c) Thuvaitham - 3. Basavar**

**(d) Advaitam - 4. Mathuvar**

**பொருத்துக :**

**(a) வீரசைவம் - 1. ராமானுஜர்**

**(b) விசிஷ்டாத்வைதம் - 2. குமரிலபட்டர்**

**(c) துவைதம் - 3. பசவர்**

**(d) அத்வைதம் - 4. மத்துவர்**

A) 3 1 4 2

B) 3 2 1 4

C) 1 3 2 4

D) 4 1 3 2

E) Answer Not Known / விடை தெரியவில்லை

113. **Match the following :**

**(a) Non-Cooperation movement - 1. 1930**

**(b) Simon Commission - 2. 1942**

**(c) Salt Satyagraha - 3. 1928**

**(d) Quit India movement - 4. 1920**

**கீழ்க்காண்பனவற்றைப் பொருத்துக :**

**(a) ஒத்துழையாமை இயக்கம் - 1. 1930**

**(b) சைமன் குழு - 2. 1942**

**(c) உப்புச் சத்தியாகிரகம் - 3. 1928**

**(d) வெள்ளையனே வெளியேறு இயக்கம் - 4. 1920**

A) 3 2 4 1

B) 2 1 4 3

C) 3 1 2 4

D) 4 3 1 2

E) Answer Not Known / விடை தெரியவில்லை

114. **Choose the right matches among the following.**

**(1) Champaran Satyagraha - Financial Troubles**

**(2) Ahmedabad Satyagraha - Mill Strike**

**(3) Kheda Satyagraha - Peasants**

**(4) Bardoli Satyagraha - Indigo planters**

**கீழ்கண்டவற்றுள் சரியாகப் பொருந்தியுள்ளவற்றைத் தேர்வு செய்யவும்.**

**(1) சம்பாரன் சத்தியாகிரகம் - நிதிச் சிக்கல்கள்**

**(2) அகமதாபாத் சத்தியாகிரகம் - ஆலை வேலை நிறுத்தம்**

**(3) கேதா சத்தியாகிரகம் - விவசாயிகள்**

**(4) பர்டோலி சத்தியாகிரகம் - இண்டிகோ தோட்டக்காரர்கள்**

A) (1) and (3) are correct / (1) மற்றும் (3) சரியானவை

B) (1) and (2) are correct / (1) மற்றும் (2) சரியானவை

C) (2) and (3) are correct / (2) மற்றும் (3) சரியானவை

D) (3) and (4) are correct / (3) மற்றும் (4) சரியானவை

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**115. Which of the following is correctly paired?**

**(1) 1964 - National Gallery of Modern Art (NGMA)**

**(2) 1971 - National Council of Educational Research and Training (NCERT)**

**(3) 1972 - Indian Council of Historical Research (ICHR)**

**(4) 2007 - National Mission on Monuments and Antiquities (NMMA)**

**பின்வருவனவற்றில் எது சரியான இணையாக அமைந்துள்ளது?**

**(1) 1964 - தேசிய நவீன கலைக் கூடம் (NGMA)**

**(2) 1971 - தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி குழு (NCERT)**

**(3) 1972 - இந்திய வரலாற்று ஆராய்ச்சி குழு (ICHR)**

**(4) 2007 - தேசிய நினைவுச் சின்னங்கள் மற்றும் பழம்பொருட்கள் இயக்கம் (NMMA)**

A) Only (3) is correct / (3) மட்டும் சரி

B) (1) and (2) are correct / (1) மற்றும் (2) சரி

C) Only (4) is correct / (4) மட்டும் சரி

D) (3) and (4) are correct / (3) மற்றும் (4) சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**116. Reason and Assertion Type.**

**Assertion [A] : Dr. Ambedkar observed that the rise of Buddhism was as significant as the French revolution.**

**Reason [R] : Dr. Ambedkar delivered a speech at Colombo, Srilanka on "The Rise and fall of Buddhism in India".**

**கூற்று மற்றும் காரணம் வகை :**

**கூற்று [A] : பௌத்த மதத்தின் எழுச்சி பிரெஞ்சுப் புரட்சியைப் போலவே முக்கியத்துவம் வாய்ந்தது என்று டாக்டர் அம்பேத்கர் குறிப்பிட்டார்.**

**காரணம் [R] : டாக்டர் அம்பேத்கர் இலங்கையின் கொழும்பில் "இந்தியாவில் பௌத்தத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.**

A) [A] is true; but [R] is false / [A] சரியானது; ஆனால் [R] தவறானது

B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரியானது. மேலும் [R] ஆனது [A] விற்கான சரியான விளக்கம்

C) [A] is false and [R] is true / [A] தவறானது மற்றும் [R] சரியானது

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரியானது. ஆனால் [R] ஆனது [A] விற்கான சரியான விளக்கம் அல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**117. Assertion [A] : The Indian National Union was renamed as Indian National Congress.**

**Reason [R] : Lord Reay was elected as the first President of the Indian National Congress.**

**கூற்று [A] : இந்திய தேசிய யூனியன் என்பது இந்திய தேசிய காங்கிரஸ் என பெயர் மாற்றப்பட்டது.**

**காரணம் [R] : இந்திய தேசிய காங்கிரசின் முதல் தலைவராக லார்டு ரே தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

A) [A] is true but [R] is false / கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு

B) Both [A] & [R] are true, and [R] is the correct explanation of [A] / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி, மற்றும் காரணம் [R] கூற்று [A] க்கான சரியான விளக்கமாகும்

C) [A] is false, [R] is true / கூற்று [A] தவறு, காரணம் [R] சரி

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி, ஆனால் காரணம் [R] கூற்று [A] க்கான சரியான விளக்கமல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**118. Why was Subhas Chandra Bose called as Netaji?**

**(i) Encourage Indians for Education.**

**(ii) Strong Leadership and dedication to the cause of India's Freedom.**

**(iii) To follow the principle of Ahimsa.**

**சுபாஷ் சந்திர போஸ் 'நேதாஜி' என்று அழைக்கப்படுவது ஏன்?**

**(i) இந்தியர்களின் கல்வியை ஊக்கப்படுத்துவது.**

**(ii) இந்திய சுதந்திரத்துக்கான வலுவான தலைமைத்துவம்.**

**(iii) அகிம்சை கொள்கையைப் பின்பற்றுவது.**

A) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

B) (i) only / (i) மட்டும்

C) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

D) (ii) only / (ii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**119. Assertion [A] : Allasani Peddana was a renowned poet in the imperial court of Krishnadeva Raya.**

**Reason [R] : He used to mix Telugu words and Sanskrit words in his poems.**

**கூற்று [A] : அல்லசானி பெத்தன்னா ஒரு சிறந்த புலவராக கிருஷ்ணதேவராயரின் அவையில் இருந்தார்.**

**காரணம் [R] : அவர் தமது பாடல்களில் தெலுங்கு சொற்களையும், சமஸ்கிருத சொற்களையும் பயன்படுத்தினார்.**

A) [A] is true but [R] is false / [A] சரியானது ஆனால் [R] தவறானது

B) [A] is false but [R] is true / [A] தவறானது ஆனால் [R] சரியானது

C) Both [A] and [R] are true but [R] is the correct reasoning for [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரியானது ஆனால் [R] என்பது [A]-ன் ஒரு சரியான விளக்கம்

D) Both [A] and [R] are true but [R] is not the correct reasoning for [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரியானது. ஆனால் [R] என்பது [A]-ன் ஒரு சரியான விளக்கமல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**120. Which of the following correctly correspond to the reasons for the decline of the Mughal Empire?**

**(i) Invasion of Nadir Shah and Ahmed Shah Abdali.**

**(ii) Weak rulers after Aurangazeb.**

**(iii) Changed character of Later Mughal Nobility.**

**(iv) Frequent famines.**

**பின்வருவனவற்றுள் முகலாய பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களில் எவை சரியாகப் பொருந்தியுள்ளன?**

**(i) நாதிர் ஷா மற்றும் அகமது ஷா அப்தாலியின் படையெடுப்புகள்.**

**(ii) அவுரங்கசீப்பிற்கு பிறகு பலவீனமான ஆட்சியாளர்கள்.**

**(iii) முகலாய அரசவை மேட்டு குடியினரின் மனநிலை மாற்றம்.**

**(iv) அடிக்கடி ஏற்பட்ட பஞ்சங்கள்.**

A) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

B) (i), (ii) and (iii) only / (i), (ii) மற்றும் (iii) மட்டும்

C) (i), (ii) and (iv) only / (i), (ii) மற்றும் (iv) மட்டும்

D) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

121. **Choose the wrong matches :**

**(1) King of Coin Reform - Muhammad Bin Tughlaq**

**(2) Akbar of Delhi Sultanate - Firuzshah Tughlaq**

**(3) Diwan-i-Kohi - Alauddin Khalji**

**(4) Quwwat-ul-Islam Mosque - Iltutmish**

**தவறான இணையைத் தேர்ந்தெடு :**

**(1) நாணய சீர்த்திருத்தத்தின் அரசன் - முகமதுபின் துக்ளக்**

**(2) டெல்லி சுல்தானிய கால அக்பர் - பிரோஸ்ஷா துக்ளக்**

**(3) திவான்-இ-கோஹி - அலாவுதீன் கல்ஜி**

**(4) குவ்வத்துல் இஸ்லாம் மசூதி - இல்துத்மிஷ்**

A) (1) and (2) / (1) மற்றும் (2)

B) (1) and (4) / (1) மற்றும் (4)

C) (2) and (3) / (2) மற்றும் (3)

D) (3) and (4) / (3) மற்றும் (4)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

122. **Choose the right matches :**

**(1) Artic Home of the Aryans - Balagangathara Thilagar**

**(2) Divine Right Theory - B.V. Kane**

**(3) Harivamsa - Kiratas**

**(4) Gana - Republic**

**சரியான இணையை தேர்ந்தெடுக்கவும்.**

**(1) ஆரியர்களின் உறைவிடம் ஆர்டிக் - பாலகங்காதர திலகர்**

**(2) தெய்வீக உரிமை கொள்கை - பி.வி.கேன்**

**(3) அரிவம்சம் - கிராதர்**

**(4) கணம் - குடியரசு**

A) (1) and (2) are correct / (1) மற்றும் (2) சரி

B) (1) and (4) are correct / (1) மற்றும் (4) சரி

C) (2) and (3) are correct / (2) மற்றும் (3) சரி

D) (3) and (4) are correct / (3) மற்றும் (4) சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

123. **Which of the following statement(s) is / are true about the Madurai Bench of the Madras High Court?**

**(i) It was started functioning on 24th June 2004.**

**(ii) It was inaugurated by the Chief Justice of India, R.C. Vijaya Kamalesh Tahil Ramani.**

**(iii) The Madurai Bench Currently (2026) covers 14 Judicial districts.**

**கீழ்க்கண்டவற்றுள் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை குறித்த சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.**

**(i) 24 ஜுன் 2004-ல் தொடங்கப்பட்டு செயல்பட்டுவருகிறது.**

**(ii) இந்தியாவின் தலைமை நீதிபதி R.C. விஜயா கமலேஷ் தஹில் ரமணி - ஆல் தொடங்கப்பட்டது.**

**(iii) உயர் நீதிமன்ற மதுரை கிளை தற்போது (2026) பதினான்கு நீதித்துறை மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது.**

A) (i) only / (i) மட்டும்

B) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

C) (iii) only / (iii) மட்டும்

D) (iii) and (ii) only / (iii) மற்றும் (ii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

124. **Match the following National Sports Awards for the year 2024 with their respective recipients :**

**Award - Recipients**

**(a) Arjuna Award - 1. Subhash Rana**

**(b) Dronacharya Award - 2. Sucha Singh**

**(c) Dhayan Chand Khel Ratna Award - 3. Chandigarh University**

**(d) Maulana Abul Kalam Azad Trophy - 4. D. Gukesh**

**கீழ்க்கண்ட 2024-ஆம் ஆண்டுக்கான தேசிய விளையாட்டு விருதுகளை அதன் சாதனையாளர்களோடு பொருத்துக :**

**விருது - சாதனையாளர்கள்**

**(a) அர்ஜுனா விருது - 1. சுபாஷ் ராணா**

**(b) துரோணாச்சாரியா விருது - 2. சுச்சா சிங்**

**(c) தயான் சந்த் கேல் ரத்னா விருது - 3. சண்டிகார் பல்கலைக்கழகம்**

**(d) மௌலானா அபுல் கலாம் ஆசாத் விருது - 4. டி. குகேஷ்**

A) 4 3 2 1

B) 2 1 4 3

C) 1 4 3 2

D) 3 2 1 4

E) Answer Not Known / விடை தெரியவில்லை

125. **Match the following :**

**(a) Union of India Vs Naveen Jindal - 1. Reservation in promotion for SC/ST's**

**(b) Prakash Singh Vs Union of India - 2. Women entry into Sabarimala Temple**

**(c) M. Nagaraj Vs Union of India - 3. Right to fly the National flag**

**(d) Indian Young Lawyers Assn. Vs State of Kerala - 4. Police Reforms**

**கீழ்க்கண்டவற்றைச் சரியாக பொருத்துக :**

**(a) இந்திய யூனியன் Vs நவீன் ஜிண்டால் - 1. SC/ST மக்களுக்குப் பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்குவது**

**(b) பிரகாஷ் சிங் Vs இந்திய ஒன்றியம் - 2. சபரிமலை கோவிலுள் பெண்களை அனுமதிப்பது**

**(c) M. நாகராஜ் Vs இந்திய ஒன்றியம் - 3. தேசியக் கொடியை பறக்கவிடும் உரிமை**

**(d) இந்திய இளம் வழக்கறிஞர்கள் சங்கம் Vs கேரள மாநிலம் - 4. காவல்துறைச் சீர்திருத்தம்**

A) 3 4 1 2

B) 2 4 1 3

C) 4 2 1 3

D) 1 4 3 2

E) Answer Not Known / விடை தெரியவில்லை

126. **Assertion [A] : Preamble generally sets the ideals and goals which the makers of the Constitution intend to achieve through the Constitution.**

**Reason [R] : Preamble is also regarded as a "Key to open the mind of the makers of the Constitution".**

**கூற்று [A] : முகப்புரையானது, அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் அந்த அரசியலமைப்பின் மூலம் அடைய விரும்பும் லட்சியங்களையும், இலக்குகளையும் குறிப்பிடுகிறது.**

**காரணம் [R] : அரசியலமைப்பை இயற்றியவர்களின் சிந்தனையைத் திறக்க முகப்புரை ஒரு திறவுகோலாக கருதப்படுகிறது.**

A) [A] is true but [R] is false / [A] சரி ஆனால் [R] தவறு

B) Both [A] and [R] are true, but [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரி ஆனால் [R] ஆனது [A] க்கான சரியான விளக்கம் ஆகும்

C) [A] is false, [R] is true / [A] தவறு [R] சரி

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] ஆனது [A] க்கான சரியான விளக்கம் அல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

127. **Which of the following features are true about a federal system?**

**(i) Distribution of Powers**

**(ii) Separation of Powers**

**(iii) Dual Government**

**(iv) A strong Union Government**

**கூட்டாட்சி அமைப்பு குறித்த கீழ்க்காணும் எக்கூற்றுகள் சரியானவை?**

**(i) அதிகாரங்களின் பகிர்வு**

**(ii) அதிகாரப் பிரிவினை**

**(iii) இரட்டை அரசாங்க முறை**

**(iv) மிக வலிமையான மத்திய அரசு**

A) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

B) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

C) (i) and (iv) only / (i) மற்றும் (iv) மட்டும்

D) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

128. **Which of the following are prohibited under Art. 23 of the Constitution of India?**

**(i) Traffic in human beings**

**(ii) Beggary**

**(iii) Untouchability**

**(iv) Forced Labour**

**இந்திய அரசமைப்பின் சரத்து 23-இன் படி பின்வரும் எவை தடைசெய்யப்பட்டுள்ளன?**

**(i) மனிதக் கடத்தல்**

**(ii) பிச்சை எடுத்தல்**

**(iii) தீண்டாமை**

**(iv) கட்டாய உழைப்பு**

A) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

B) (i), (ii) and (iii) only / (i), (ii) மற்றும் (iii) மட்டும்

C) (i), (ii) and (iv) only / (i), (ii) மற்றும் (iv) மட்டும்

D) (ii), (iii) and (iv) only / (ii), (iii) மற்றும் (iv) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

129. **Match correctly the Articles with the subject matter :**

**(a) Article 40 - 1. Living wage for workers**

**(b) Article 42 - 2. Just and humane conditions of work**

**(c) Article 43 - 3. Uniform Civil Code**

**(d) Article 44 - 4. Organisation of village panchayats**

**அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகளை அவற்றின் பொருளமைப்புகளோடு பொருத்துக :**

**(a) பிரிவு 40 - 1. தொழிலாளர்களுக்கான வாழ்வாதார ஊதியம்**

**(b) பிரிவு 42 - 2. நியாயமான மனிதத்தன்மையுடைய பணிச்சூழல்**

**(c) பிரிவு 43 - 3. பொது சிவில் சட்டம்**

**(d) பிரிவு 44 - 4. கிராமப் பஞ்சாயத்துகளை அமைத்தல்**

A) 3 4 1 2

B) 2 4 1 3

C) 4 2 1 3

D) 1 4 3 2

E) Answer Not Known / விடை தெரியவில்லை

130. **Which of the following Article in the Indian Constitution is incorrectly paired?**

**Article - Provision**

**(i) Article 74 - Council of Ministers**

**(ii) Article 76 - Advocate General of India**

**(iii) Article 85 - Sessions of the Parliament**

**(iv) Article 75 - Tenure of Ministers**

**கீழ்கண்ட இந்திய அரசமைப்புப் பிரிவுகளில் எது சரியாகப் பொருந்தவில்லை?**

**பிரிவு - விதிமுறை**

**(i) பிரிவு 74 - அமைச்சரவை**

**(ii) பிரிவு 76 - இந்தியாவின் தலைமை வழக்கறிஞர்**

**(iii) பிரிவு 85 - பாராளுமன்ற அமர்வுகள்**

**(iv) பிரிவு 75 - அமைச்சர்களின் பதவிக்காலம்**

A) (i) and (ii) / (i) மற்றும் (ii)

B) (ii) only / (ii) மட்டும்

C) (iii) and (iv) / (iii) மற்றும் (iv)

D) (iv) only / (iv) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

131. **Which of the following statements are not true about Speaker of Lok Sabha?**

**(1) The decision of the Speaker as to whether a Bill is Money Bill is final.**

**(2) The Speaker of Lok Sabha shall be submit his resignation letter to the President.**

**(3) A Non-Member of Lok Sabha shall be appointed as Speaker of Lok Sabha.**

**மக்களவைத் தலைவரைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது உண்மையல்ல?**

**(1) ஒரு மசோதா, பண மசோதாவா என்பது குறித்து மக்களவைத் தலைவரின் முடிவே இறுதியானது.**

**(2) மக்களவைத் தலைவர் தனது பதவி விலகல் கடிதத்தைக் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிப்பார்.**

**(3) மக்களவை உறுப்பினரல்லாத ஒருவர் மக்களவைத் தலைவராக நியமிக்கப்படுவார்.**

A) (1) only / (1) மட்டும்

B) (1) and (3) only / (1) மற்றும் (3) மட்டும்

C) (1) and (2) only / (1) மற்றும் (2) மட்டும்

D) (2) and (3) only / (2) மற்றும் (3) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

132. **Assertion [A] and Reason [R] question Type :**

**Assertion [A] : The emoluments and allowances of the Governor shall not be diminished during his term of office.**

**Reason [R] : Where the same person is appointed as Governor of two or more states, the emoluments and allowances payable to the Governor shall be allocated among the states in such proportion as the President may by order determine.**

**கூற்று [A] மற்றும் காரணம் [R] வகை வினா :**

**கூற்று [A] : ஆளுநரின் பதவிக்காலத்தில் அவரது ஊதியமும் படிகளும் குறைக்கப்படக்கூடாது.**

**காரணம் [R] : ஒரே நபர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் ஆளுநராக நியமிக்கப்படும்போது, அவருக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் மற்றும் படிகள் ஆகியவை குடியரசுத் தலைவர் தீர்மானிக்கும் விகிதாச்சாரப்படி அந்த மாநிலங்களிடையே பகிர்ந்தளிக்கப்படும்.**

A) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A] / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி, மேலும் காரணம் [R] கூற்று [A] க்கான சரியான விளக்கமாகும்

B) [A] is true but [R] is false / கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு

C) [A] is false but [R] is true / கூற்று [A] தவறு ஆனால் காரணம் [R] சரி

D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A] / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி ஆனால் காரணம் [R] கூற்று [A] க்கான சரியான விளக்கமல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

133. **Consider the following statements and choose the correct option from below :**

**Assertion [A] : Every state in India shall consist of Bicameral Legislature namely Legislative Assembly and Legislative Council.**

**Reason [R] : The members of Legislative Council are directly elected by the people.**

**கீழ்க்காணப்படும் வாக்கியங்களை கருதுக, சரியான விடையினை தேர்வு செய்க.**

**கூற்று [A] : இந்தியாவில் அனைத்து மாநிலங்களும், சட்டபேரவை, சட்ட மேலவை என்ற ஈரவைகளைக் கொண்டுள்ளன.**

**காரணம் [R] : சட்டமேலவை உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.**

A) Both [A] and [R] are true / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி

B) Both [A] and [R] are false / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் தவறு

C) [A] true, but [R] false / கூற்று [A] சரி, ஆனால் காரணம் [R] தவறு

D) [A] false, but [R] true / கூற்று [A] தவறு, ஆனால் காரணம் [R] சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

134. **Identify the correct statement about "Money Bill".**

**(i) A Money Bill must originate in the Lower House of the State Legislature.**

**(ii) A Money Bill must originate in the Legislative Council.**

**(iii) The Legislative Council cannot reject or amend the bill.**

**"பண மசோதா" குறித்த கீழ்கண்ட சரியான கூற்றினைக் கண்டறிக.**

**(i) பண மசோதா முதலில் மாநில கீழவையான சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட வேண்டும்.**

**(ii) பண மசோதா முதலில் சட்ட மேலவையில் கொண்டுவரப்பட வேண்டும்.**

**(iii) சட்ட மேலவை மசோதாவை நிராகரிக்கவோ அல்லது திருத்தவோ முடியாது.**

A) (i) only / (i) மட்டும்

B) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

C) (ii) only / (ii) மட்டும்

D) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

135. **Which of the following is/are not the recommendations of the committee on Panchayat Raj Finances, 1962?**

**(i) The District Collector was to be a member of Zila Parishad.**

**(ii) Financial Resources to Panchayat Samitis.**

**(iii) Loans to Panchayat Raj bodies.**

**கீழ்க்கண்டவற்றுள் பஞ்சாயத்து ராஜ் நிதிக்குழு, 1962-ன் பரிந்துரை அல்லாதது எது/எவை?**

**(i) மாவட்ட ஆட்சியர் ஜில்லா பரிஷத்தின் உறுப்பினராக இருக்க வேண்டும்.**

**(ii) பஞ்சாயத்து சமிதிக்கான நிதி ஆதாரங்கள்.**

**(iii) பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கான கடன்கள்.**

A) (i) only / (i) மட்டும்

B) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

C) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

D) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

136. **Reason and Assertion type :**

**Assertion [A] : Seventy third Constitutional Amendment Act, 1992 was enacted to strengthen the Panchayat system in villages.**

**Reason [R] : Article 40 of the Directive Principles of State policy provides the state shall take steps to organise village Panchayats.**

**காரணம் மற்றும் கூற்று வகை :**

**கூற்று [A] : கிராமப் பஞ்சாயத்துக்களை வலுப்படுத்துவதற்கென எழுபத்து மூன்றாவது அரசமைப்புத் திருத்தச்சட்டம் 1992 இயற்றப்பட்டது.**

**காரணம் [R] : அரசின் வழிகாட்டு நெறிமுறை கொள்கை, சட்டப்பிரிவு 40 கிராமப் பஞ்சாயத்துக்களை ஒருங்கிணைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூறுகின்றது.**

A) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R] என்பது [A]-இன் சரியான விளக்கமாகும்

B) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A]-இன் சரியான விளக்கமல்ல

C) [A] is true, but [R] is false / [A] சரி, ஆனால் [R] தவறு

D) [A] is false, but [R] is true / [A] தவறு, ஆனால் [R] சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

137. **Arrange the following "Human Rights" events in chronological order.**

**(1) Convention on the Elimination of all the forms of discrimination against women.**

**(2) Universal Declaration of Human Rights (UDHR).**

**(3) International Committee of Red Cross.**

**(4) Magna Carta.**

**பின்வரும் "மனித உரிமைகள்" நிகழ்வுகளைக் காலவரிசைப்படுத்துக.**

**(1) பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் களைவதற்கான உடன்படிக்கை.**

**(2) மனித உரிமைகள் குறித்த அனைத்துலக பிரகடனம் (UDHR).**

**(3) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்.**

**(4) மேக்னா கார்டா (பெரிய சாசனம்).**

A) (2), (3), (1), (4)

B) (1), (2), (4), (3)

C) (4), (3), (2), (1)

D) (3), (1), (4), (2)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

138. **Which of the following is incorrectly paired?**

**(1) Attorney General of India - Appointed by the Prime Minister**

**(2) Governor - Appointed by the President**

**(3) Chief Justice of High Court - Appointed by the Chief Minister**

**(4) Chief Justice of Supreme Court - Appointed by the President**

**கீழ்கண்டவற்றில் எவை தவறாகப் பொருந்தியுள்ளன?**

**(1) இந்தியாவின் அட்டர்னி ஜெனரல் - பிரதம மந்திரியால் நியமிக்கப்படுகின்றார்**

**(2) ஆளுநர் - குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றார்**

**(3) உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி - முதலமைச்சரால் நியமிக்கப்படுகின்றார்**

**(4) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி - குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றார்**

A) (1) and (4) / (1) மற்றும் (4)

B) (1) and (2) / (1) மற்றும் (2)

C) (2) and (3) / (2) மற்றும் (3)

D) (1) and (3) / (1) மற்றும் (3)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

139. **Which of the following are correctly paired?**

**(1) Kesavananda Bharati Case - 1973**

**(2) Indira Gandhi Vs. Raj Narain Case - 1970**

**(3) Minerva Mills Case - 1980**

**(4) Bachan Singh Case - 1984**

**கீழ்க்கண்ட இணைகளில் எவை சரியாக பொருந்தியுள்ளது?**

**(1) கேசவானந்த பாரதி வழக்கு - 1973**

**(2) இந்திராகாந்தி Vs. ராஜ் நாராயண் வழக்கு - 1970**

**(3) மினர்வா மில்ஸ் வழக்கு - 1980**

**(4) பசன் சிங் வழக்கு - 1984**

A) (1) and (3) are correct / (1) மற்றும் (3) சரி

B) (1) and (2) are correct / (1) மற்றும் (2) சரி

C) (2) and (4) are correct / (2) மற்றும் (4) சரி

D) (1) and (4) are correct / (1) மற்றும் (4) சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**140. Which of the following statements are true about "Lokpal" in India?**

**(i) "Lokpal" is an officer appointed by Parliament to investigate the mal-administration.**

**(ii) No Lokpal appointed yet in India.**

**(iii) "Lokpal" established in Union level "Lok ayuktha" established in state level.**

**இந்தியாவில் லோக்பால் குறித்த பின்வரும் எக்கூற்று சரியானவை?**

**(i) லோக்பால் முறைக்கெட்ட நிர்வாகத்தினை விசாரிக்க பாராளுமன்றத்தினால் நியமிக்கப்படும் ஆணையாளர்.**

**(ii) இந்தியாவில் இதுவரை லோக்பால் நியமிக்கப்படவில்லை.**

**(iii) "லோக்பால்" மத்திய அளவிலும், லோக் ஆயுக்தா மாநில அளவிலும் நிறுவப்பட்டுள்ளன.**

A) (i) only / (i) மட்டும்

B) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

C) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

D) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**141. Arrange the following conventions in chronological order**

**(1) Convention on the Elimination of All Forms of Discrimination against women.**

**(2) Convention on the prevention and punishment of the crime of Genocide.**

**(3) Convention on the Elimination of All Forms of Racial Discrimination.**

**(4) Convention on the Rights of the child.**

**பின்வரும் உடன்படிக்கைகளைக் காலவரிசைப்படுத்துக.**

**(1) பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான உடன்படிக்கை.**

**(2) இனப்படுகொலை குற்றத்தைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான உடன்படிக்கை.**

**(3) அனைத்து வகையான இனப் பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான உடன்படிக்கை.**

**(4) குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை.**

A) (2), (3), (1), (4)

B) (1), (2), (4), (3)

C) (4), (3), (2), (1)

D) (3), (1), (4), (2)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**142. Price Stabilisation Fund (PSF) was set up in the year _______.**

**'விலை நிலைத்தன்மை நிதியம்' ஏற்படுத்தப்பட்ட ஆண்டு _______**

A) 2012

B) 2015

C) 2014

D) 2017

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**143. ______ is an active application used across major Indian Airports reducing the processing time using facial recognition technology.**

**______ என்பது இந்தியாவின் முக்கிய விமான நிலையங்களில் பயன்படுத்தப்படும் ஒரு செயலி ஆகும். இது முக அங்கீகாரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செயல்முறைக்கான நேரத்தைக் குறைக்கிறது.**

A) Digi Yatra / டிஜி யாத்ரா

B) Dak Namod / டாக் நமோத்

C) Paryatan Mitra / பர்யதான் மித்ரா

D) Yuva / யுவா

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**144. Which of the following statements are true about Economic Infrastructure Investment?**

**(i) It is generally aimed to realize relatively more direct benefits than in social infrastructure.**

**(ii) It is generally smaller in size.**

**(iii) It is generally invites from public sector as well as private sector.**

**பொருளாதாரக் கட்டமைப்பு முதலீடு குறித்த பின்வரும் கூற்றுகளில் எவை உண்மையானவை?**

**(i) இது பொதுவாக, சமூக உள்கட்டமைப்பை விட ஒப்பீட்டளவில் அதிக நேரடிப் பலன்களை அடைவதை நோக்கமாக கொண்டுள்ளது.**

**(ii) இது பொதுவாக அளவில் சிறியது.**

**(iii) இது பொதுவாக, பொதுத்துறை மற்றும் தனியார் துறையினரிடமிருந்து கோரப்படுகிறது.**

A) (i) only / (i) மட்டும்

B) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

C) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

D) (iii) only / (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**145. "An Indian farmer is born in debt, lives in debt, dies in debt and bequeath debt" said by ______**

**'இந்திய விவசாயி கடனில் பிறந்து, வாழ்ந்து கடனில் இறந்து அந்த கடனையும் விட்டுச் செல்ல வேண்டியுள்ளது' - இது யாருடைய கூற்று?**

A) Adam Smith / ஆடம் ஸ்மித்

B) Gandhi / காந்தி

C) Amartya Sen / அமர்த்தியா சென்

D) Sir Malcolm Darling / சர் மால்கம் டார்லிங்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**146. Assertion [A] : Higher knowledge increases productivity of the labour force.**

**Reason [R] : Higher expenditure on education yields higher knowledge.**

**கூற்று [A] : உயர்வான அறிவு தொழிலாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது.**

**காரணம் [R] : கல்வியில் அதிக செலவு, உயர்வான அறிவைத் தரும்.**

A) [A] is true but [R] is false / [A] சரி ஆனால் [R] தவறானது

B) [A] is false but [R] is true / [A] தவறு ஆனால் [R] சரியானது

C) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] சரி ஆனால் [R] என்பது [A] ன் சரியான விளக்கமல்ல

D) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] சரி மற்றும் [R] என்பது [A] ன் சரியான விளக்கம்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

147. **Which Five Year Plan based on the National Goal of "Socialist Economy"?**

**எந்த ஐந்தாண்டுத் திட்டம் தேசியக் குறிக்கோளான "சமதர்மப் பொருளாதாரத்தை" அடிப்படையாகக் கொண்டது?**

A) First Five Year Plan / முதல் ஐந்தாண்டுத் திட்டம்

B) Second Five Year Plan / இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

C) Third Five Year Plan / மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்

D) Fourth Five Year Plan / நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

148. **Assertion [A] : India adopted a mixed economic system after independence in order to combine economic growth with social justice and welfare objectives.**

**Reason [R] : The mixed economy framework permits the co-existence of public and private sectors while allowing government intervention where necessary.**

**கூற்று [A] : பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதி, நலவாழ்வு ஆகிய நோக்கங்களை ஒருங்கிணைப்பதற்காக, சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய கலப்புப் பொருளாதார முறையை ஏற்றுக் கொண்டது.**

**காரணம் [R] : கலப்புப் பொருளாதாரக் கட்டமைப்பானது பொது மற்றும் தனியார் துறைகள் இணைந்து செயல்பட அனுமதிப்பதோடு தேவைப்படும் பொழுது அரசின் தலையீட்டிற்கும் வழிவகுக்கிறது.**

A) [A] is true but [R] is false / கூற்று [A] சரியானது ஆனால் காரணம் [R] தவறானது

B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A] / கூற்று [A] மற்றும் காரணம் [R] ஆகியவை இரண்டும் சரியானது மேலும் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கமாகும்

C) [A] is false but [R] is true / கூற்று [A] தவறானது ஆனால் காரணம் [R] சரியானது

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / கூற்று [A] மற்றும் காரணம் [R] ஆகியவை இரண்டும் சரியானது. ஆனால் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கம் அல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

149. **Arrange the following events in chronological order**

**(1) Foreign Exchange Management Act**

**(2) Bank Regulation Act**

**(3) Factoring Regulation Act**

**(4) Payment and settlement systems Act**

**பின்வரும் நிகழ்வுகளைக் காலவரிசைப்படி அடுக்குக.**

**(1) அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம்**

**(2) வங்கி ஒழுங்குமுறைச் சட்டம்**

**(3) காரணிப்படுத்தல் ஒழுங்குமுறைச் சட்டம்**

**(4) செலுத்துதல் மற்றும் தீர்வு அமைப்புகள் சட்டம்**

A) (2), (1), (4), (3)

B) (3), (1), (4), (2)

C) (4), (3), (2), (1)

D) (1), (2), (4), (3)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

150. **Match the criteria for devolution weight % in 15th Finance Commission.**

**(a) Tax efforts - 1. 10.0%**

**(b) Population (2011) - 2. 2.5%**

**(c) Forest and Ecology - 3. 15%**

**(d) Income Distance - 4. 45%**

**15வது நிதி ஆணையத்தின் நிதிப்பகிர்விற்கான சதவிகிதப் பகிர்வினைப் பொருத்தவும் :**

**(a) வரி முயற்சி - 1. 10.0%**

**(b) மக்கட்தொகை (2011) - 2. 2.5%**

**(c) காடு மற்றும் சூழலியல் - 3. 15%**

**(d) வருமான அடிப்படை - 4. 45%**

A) 2 3 1 4

B) 3 2 4 1

C) 1 2 3 4

D) 4 2 3 1

E) Answer Not Known / விடை தெரியவில்லை

151. **According to Tamil Nadu Industrial Policy 2014, among the Indian States, Tamil Nadu ranked first in terms of ______.**

**Choose the right answer:**

**(i) Number of factories**

**(ii) Number of workers employed in the factories sector**

**(iii) Gross industrial output**

**(iv) Net value addition**

**தமிழ்நாடு தொழில் கொள்கை 2014-இன் படி, இந்திய மாநிலங்களில், தமிழ்நாடு எதன் அடிப்படையில் முதலிடம் வகிக்கிறது?**

**பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்வு செய்க.**

**(i) தொழிற்சாலைகளின் எண்ணிக்கை**

**(ii) தொழிற்சாலை துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை**

**(iii) மொத்த தொழில்துறை உற்பத்தி**

**(iv) நிகர மதிப்புக் கூட்டல்**

A) (i) and (ii) / (i) மற்றும் (ii)

B) (ii) and (iii) / (ii) மற்றும் (iii)

C) (iii) and (iv) / (iii) மற்றும் (iv)

D) (i), (ii) and (iii) / (i), (ii) மற்றும் (iii)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

152. **Which of the following are addressed in National Rural Health Mission?**

**(1) Reduce Infant Mortality Rate**

**(2) Ensure Population Stability**

**(3) Reduce Total Fertility Rate**

**(4) Control Communicable and Non-Communicable Diseases**

**பின்வருவனவற்றில் எவை தேசிய கிராமப்புற சுகாதாரப் பணியில் கவனம் செலுத்தப்படுகின்றன?**

**(1) குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்தல்**

**(2) மக்கள்தொகை நிலைத்தன்மையை உறுதி செய்தல்**

**(3) மொத்த கருவுறுதல் விகிதத்தைக் குறைத்தல்**

**(4) தொற்று மற்றும் தொற்று அல்லாத நோய்களைக் கட்டுப்படுத்துதல்**

A) (1) and (2) only / (1) மற்றும் (2) மட்டும்

B) (1), (2) and (3) only / (1), (2) மற்றும் (3) மட்டும்

C) (2) and (3) only / (2) மற்றும் (3) மட்டும்

D) (1), (2), (3) and (4) only / (1), (2), (3) மற்றும் (4) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

153. **Match the following**

**(a) Mahatma Gandhi National Rural Employment Guarantee Act - 1. 1973**

**(b) Monopolies Restrictive Trade Practices Act - 2. 2003**

**(c) Foreign Exchange Regulation Act - 3. 2005**

**(d) Fiscal Responsibility Budget Management Act - 4. 1969**

**பொருத்துக :**

**(a) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச்சட்டம் - 1. 1973**

**(b) ஏகபோகக் கட்டுப்பாட்டு வர்த்தக நடைமுறைகள் சட்டம் - 2. 2003**

**(c) அந்நியச் செலாவணி ஒழுங்குமுறைச் சட்டம் - 3. 2005**

**(d) நிதி பொறுப்பு பட்ஜெட் மேலாண்மைத் திட்டம் - 4. 1969**

A) 3 4 1 2

B) 1 2 3 4

C) 4 3 2 1

D) 2 1 4 3

E) Answer Not Known / விடை தெரியவில்லை

154. **Arrange chronological order of dam construction in Tamil Nadu**

**(1) Mullai Periyar dam**

**(2) Mettur dam**

**(3) Vaigai dam**

**(4) Bhavani Sagar dam**

**தமிழ்நாட்டில் கட்டப்பட்ட அணைகளை ஆண்டின் அடிப்படையில் வரிசைப்படுத்துக.**

**(1) முல்லைப் பெரியார் அணை**

**(2) மேட்டூர் அணை**

**(3) வைகை அணை**

**(4) பவானி சாகர் அணை**

A) (1), (4), (2), (3)

B) (1), (2), (4), (3)

C) (2), (4), (3), (1)

D) (4), (3), (2), (1)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

155. **Mannuyir Kaathu Mannuyir Kaapoom Scheme major aim is :**

**மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் முக்கிய நோக்கம் :**

A) Increasing the yield per hectare / ஒரு ஹெக்டேருக்கு மகசூலை அதிகரித்தல்

B) Preserving the soil fertility / மண் வளத்தைப் பாதுகாத்தல்

C) Improving irrigation facilities / நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துதல்

D) Introducing modern farming methods / நவீன விவசாய முறைகளை அறிமுகப்படுத்துதல்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

156. **Which of the following is incorrectly to the Highlights of MSMEs from Union Budget 2026-27?**

**(i) Dedicated Support to MSMEs**

**(ii) Strengthening financial and Market access**

**(iii) Linking GeM with TReDS to standardize and expedite payments and working capital flow for MSMEs**

**(iv) Double digital window for faster clearances reducing delays and compliance burdens**

**மத்திய பட்ஜெட் 2026-27இல் MSMEs (குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்) தொடர்பான சிறப்பம்சங்களில் பின்வருவனவற்றுள் எது தவறானது?**

**(i) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான பிரத்யேக ஆதரவு**

**(ii) நிதி மற்றும் சந்தைக்கான அணுகுமுறைகளை வலுப்படுத்துதல்**

**(iii) MSMEs-க்களுக்கான கட்டணங்கள் மற்றும் செயல்பாட்டு மூலதனப் பரிமாற்றத்தைச் சீராக்கவும் விரைவுபடுத்தவும் GeMஐ TReDS-உடன் இணைத்தல்**

**(iv) இரட்டை இலக்க சாளர முறையால் தாமதங்களையும் இணக்கச் சுமையையும் குறைத்து, விரைவான அனுமதிக்கு உதவும்**

A) (i) only / (i) மட்டும்

B) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

C) (iv) only / (iv) மட்டும்

D) (i), (ii), (iii) only / (i), (ii), (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

157. **Employment projections for the Eleventh and Twelfth plans were**

**பதினொன்றாவது மற்றும் பன்னிரண்டாவது திட்டங்களுக்கான வேலைவாய்ப்புக் கணிப்புகள்**

A) Labour force participation rate is increased because of female participation rates increased / பெண்களின் பங்கேற்பு விகிதங்கள் அதிகரித்துள்ளதால் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் அதிகரித்துள்ளது

B) Labour force participation rate is increased because of male participation rates increased / ஆண்களின் பங்கேற்பு விகிதங்கள் அதிகரித்துள்ளதால் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் அதிகரித்துள்ளது

C) Labour force participation rate is increased because of demand exist in India / இந்தியாவில் தேவை இருப்பதால் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் அதிகரித்துள்ளது

D) Labour force participation rate is increased because of price increased in India / இந்தியாவில் விலை அதிகரித்ததால் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் அதிகரித்துள்ளது

E) Answer Not Known / விடை தெரியவில்லை

158. **Match correctly the Acts with the corresponding years**

**(a) Dowry Prohibition Act - 1. 1990**

**(b) Hindu Marriage Act - 2. 1961**

**(c) National Commission for Women Act - 3. 2001**

**(d) National Policy for Empowerment of Women - 4. 1955**

**பின்வரும் சட்டங்களை அது தொடர்புடைய வருடங்களுடன் காலவரிசைப்படி பொருத்துக :**

**(a) வரதட்சணை தடைச் சட்டம் - 1. 1990**

**(b) இந்து திருமணச் சட்டம் - 2. 1961**

**(c) தேசிய மகளிர் ஆணைய சட்டம் - 3. 2001**

**(d) பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான தேசியக் கொள்கை - 4. 1955**

A) 2 4 3 1

B) 2 1 4 3

C) 2 4 1 3

D) 2 3 1 4

E) Answer Not Known / விடை தெரியவில்லை

159. **Match the following :**

**(a) The R.B.I. was nationalised - 1. 1973**

**(b) Foreign Exchange Management Act (FEMA) - 2. 1935**

**(c) Foreign Exchange Regulation Act (FERA) - 3. 1949**

**(d) The R.B.I was established in the year - 4. 1999**

**பொருத்துக :**

**(a) இந்திய ரிசர்வ் வங்கி தேசியமயமாக்கப்பட்டது - 1. 1973**

**(b) அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம் - 2. 1935**

**(c) அந்நியச் செலாவணி ஒழுங்குமுறைச் சட்டம் - 3. 1949**

**(d) இந்திய ரிசர்வ் வங்கி உருவாக்கப்பட்ட ஆண்டு - 4. 1999**

A) 2 3 4 1

B) 4 3 2 1

C) 3 4 1 2

D) 2 4 3 1

E) Answer Not Known / விடை தெரியவில்லை

160. **Reason and Assertion type :**

**Assertion [A] : The State Resource Centre for women was initiated in Tamil Nadu under National Mission.**

**Reason [R] : Mahila Shakti Kendra, one stop centre and Women Helpline are co-ordinated through the State Resource Centre for women.**

**கூற்று மற்றும் காரணம் வகை :**

**கூற்று [A] : தேசிய இயக்கத்தின் கீழ் பெண்களுக்கான மாநில வள மையம் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுள்ளது.**

**காரணம் [R] : மகிளா சக்தி கேந்திரா, ஒரு நிறுத்த மையம் மற்றும் மகளிர் உதவி எண் ஆகியவை பெண்களுக்கான மாநில வள மையத்தின் மூலம் ஒருங்கிணைக்கப்படுகின்றன.**

A) [A] is true [R] is false / [A] சரியானது [R] தவறானது

B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] சரியானது மற்றும் [R] ஆனது [A]யின் சரியான விளக்கமாகும்

C) [A] is false and [R] is true / [A] தவறானது மற்றும் [R] சரியானது

D) [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] சரியானது ஆனால் [R] ஆனது [A]யின் சரியான விளக்கமில்லை

E) Answer Not Known / விடை தெரியவில்லை

161. **Which of the following are the objectives of the start up Tamil Nadu initiative?**

**(i) To promote innovation and Entrepreneurship by providing support and infrastructure.**

**(ii) To simplify regulations and processes for startups to enhance ease of doing business.**

**(iii) To increase Government control over the startup ecosystem in Tamil Nadu.**

**பின்வருவனவற்றில் ஸ்டார்ட்அப் தமிழ்நாடு முன் முயற்சியின் நோக்கங்கள் எவை?**

**(i) ஆதரவு மற்றும் உள்கட்டமைப்பை வழங்குவதன் மூலம் புதுமை புகுத்துவோர் மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவித்தல்.**

**(ii) தொழில் செய்வதை எளிதாக்குவதற்காக ஸ்டார்ட்அப்களுக்கான விதிமுறைகள் மற்றும் செயல்முறைகளை எளிதாக்குதல்.**

**(iii) தமிழ்நாட்டில் ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல் அமைப்பின் மீது அரசாங்க கட்டுப்பாட்டை அதிகரித்தல்.**

A) (i) only / (i) மட்டும்

B) (ii) and (iii) only / (ii) மற்றும் (iii) மட்டும்

C) (i) and (ii) only / (i) மற்றும் (ii) மட்டும்

D) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

162. **Assertion [A] : The Tamil Nadu State Commission for women investigates issues related to violations of women's rights.**

**Reason [R] : Its main function is to safeguard women's rights.**

**கூற்று [A] : தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் பெண்களின் உரிமைகள் மீறப்படுவது தொடர்பான விவகாரங்களை விசாரிக்கிறது.**

**காரணம் [R] : பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதே இதன் முக்கியப் பணியாகும்.**

A) [A] is true [R] is false / [A] சரி [R] தவறு

B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டுமே சரி மற்றும் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கம்

C) [A] is false [R] is true / [A] தவறு [R] சரி

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டுமே சரி, ஆனால் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கம் அல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

163. **Which among the following ministry is entrusted responsible person to the requirements of neglected and marginalised people?**

**புறக்கணிக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய பின்வரும் எந்த அமைச்சகத்திடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது?**

A) Ministry of Tribal Affairs / பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சகம்

B) Ministry of Social Justice and Empowerment / சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

C) Ministry of Women and Child Development / பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

D) Ministry of Minority Affairs / சிறுபான்மை விவகாரங்கள் துறை அமைச்சகம்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

164. **Find the name of the personality based on the following statements.**

**(1) His major literary work is "The Comparative Grammar of the Dravidian Languages".**

**(2) He opined that, "Tamil language flourished on its own, it's not depend on any other languages".**

**(3) His statue stands on Marina Beach at Chennai.**

**பின்வரும் கூற்றுகளின் அடிப்படையில் சரியான ஆளுமையைக் கண்டறிக.**

**(1) "திராவிட மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம்" இவரது ஒரு முக்கிய இலக்கியப் படைப்பாகும்.**

**(2) "தமிழ்மொழி தானே செழித்தது, அது மற்ற மொழிகளைச் சார்ந்து அல்ல" என்ற கருத்தை முன்மொழிந்தார்.**

**(3) அவரது திருவுருவச்சிலை சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ளது.**

A) G.U. Pope / ஜி.யு. போப்

B) Robert Caldwell / ராபர்ட் கால்டுவெல்

C) St. Thomas / செயின்ட். தாமஸ்

D) Kamala Das / கமலாதாஸ்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

165. **Assertion [A] : Social reform movements encouraged women's education.**

**Reason [R] : Educated women were considered essential for social progress.**

**கூற்று [A] : சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் பெண் கல்வியை ஊக்குவித்தன.**

**காரணம் [R] : கல்வியறிவு பெற்ற பெண்கள் சமூக முன்னேற்றத்திற்கு அவசியம் என கருதப்பட்டனர்.**

A) [A] is true but [R] is false / [A] சரி ஆனால் [R] தவறு

B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டுமே சரி மற்றும் [R] என்பது [A] வின் சரியான விளக்கம்

C) [A] is false, [R] is true / [A] தவறு, [R] சரி

D) Both [A] and [R] are true but [R] is not the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டுமே சரி ஆனால் [R] என்பது [A] வின் சரியான விளக்கம் இல்லை

E) Answer Not Known / விடை தெரியவில்லை

166. **The SHANTI Bill, 2025 is related to which one of the following sector?**

**SHANTI மசோதா, 2025 பின்வருவனவற்றுள் எந்தத் துறையுடன் தொடர்புடையது?**

A) Space technology / விண்வெளித் தொழில்நுட்பம்

B) Nuclear energy / அணுசக்தி

C) Renewable energy / புதுப்பிக்கத்தக்க ஆற்றல்

D) Defence manufacturing / பாதுகாப்புத் துறை உற்பத்தி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

167. **Assertion [A] : What is virtue? It is not to kill, for killing causes every ill.**

**Reason [R] : All virtues the most excellent is non-killing. Next to that, the best is not lying.**

**கூற்று [A] : அறவினை யாதெனின் கொல்லாமை கோறல் பிறவினை எல்லாந் தரும்.**

**விளக்கம் [R] : அறங்கள் எல்லாவற்றும் தனிச் சிறப்புடையது கொல்லாமையாகும். அதற்குப் பின் சிறந்து நிற்றற்குரியது பொய்யாமையாகும்.**

A) [A] is true but [R] is false / கூற்று [A] சரி ஆனால் விளக்கம் [R] தவறு

B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A] / கூற்று [A] விளக்கம் [R] இரண்டும் சரி, மற்றும் கூற்று [A]-க்கு [R] சரியான விளக்கம்

C) [A] is false [R] is true / கூற்று [A] தவறு விளக்கம் [R] சரி

D) Both [A] and [R] are true; but [R] is not correct explanation of [A] is correct / கூற்று [A] விளக்கம் [R] இரண்டும் சரி; ஆனால் கூற்று [A]-க்கு சரியான விளக்கம் [R] இல்லை என்பது சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

168. **Who is described as follows?**

**"Naal, Kol, Thingal, Gnayiru, Kanai Azhal**
**Aynthu Orungu Punarntha Vilakathu Anaiyai"**

**"நாள், கோள், திங்கள், ஞாயிறு, கனை அழல்**
**ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை"**

**என்று பாராட்டப்படுபவர்**

A) Uthiyan Cheralathan / உதியன் சேரலாதன்

B) Cheran Senkuttuvan / சேரன் செங்குட்டுவன்

C) Kalankaykanni Narmudiseral / களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்

D) Imayavarampan Nedum Cheralathan / இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**169. How can one feels or know about love according to Valluvar?**

**அன்பை அறியச் செய்வது என வள்ளுவர் குறிப்பிடுவது**

A) Money / பணம்

B) Expensive Material / விலையுயர்ந்த பொருள்

C) Tears / கண்ணீர்

D) Good Food / நல்ல உணவு

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**170. Who is the Disciple(s) of Pattinathar?**

**(1) Idaikattu Siddhar**

**(2) Pathirakiriyar**

**(3) Pambatti Siddhar**

**(4) Agappei Siddhar**

**பட்டினத்தாரின் சீடர் மற்றும் சீடர்களாய் அமைந்தவர் ______.**

**(1) இடைக்காட்டுச் சித்தர்**

**(2) பத்திரகிரியார்**

**(3) பாம்பாட்டிச் சித்தர்**

**(4) அகப்பேய் சித்தர்**

A) Option (2) only correct / (2) மட்டும் சரி

B) Option (1) and (3) only correct / (1) மற்றும் (3) சரி

C) Option (2) and (4) only correct / (2) மற்றும் (4) சரி

D) Option (1) and (4) only correct / (1) மற்றும் (4) சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**171. Select the incorrect ones :**

**(i) Cherar - Chempiyan**

**(ii) Chozhar - Bhuzhi**

**(iii) Pandiyar - Gowriyar**

**(iv) Kathyanam - Pondu**

**தவறானதைத் தேர்ந்தெடுக்க :**

**(i) சேரர் - செம்பியன்**

**(ii) சோழர் - பூழி**

**(iii) பாண்டியர் - கவுரியர்**

**(iv) காத்யானம் - பாண்டு**

A) (i) and (iii) only incorrect / (i) மற்றும் (iii) மட்டும் தவறு

B) (ii) and (iv) only incorrect / (ii) மற்றும் (iv) மட்டும் தவறு

C) (i) and (ii) only incorrect / (i) மற்றும் (ii) மட்டும் தவறு

D) (iii) and (iv) only incorrect / (iii) மற்றும் (iv) மட்டும் தவறு

E) Answer Not Known / விடை தெரியவில்லை

172. **Assertion [A] : Thanthai Periyar convened a special conference at Erode on October 23, 1948 and asked Perarignar Anna to preside over the Conference.**

**Reason [R] : The Inimitable comedian of Tamil screen N.S. Krishnan sang the invocation song.**

**கூற்று [A] : தந்தை பெரியார் அக்டோபர், 23, 1948 அன்று ஈரோட்டில் ஒரு சிறப்பு மாநாட்டைக் கூட்டினார். பேரறிஞர் அண்ணாவை அம் மாநாட்டிற்குத் தலைமையேற்கக் கூறினார்.**

**காரணம் [R] : தமிழ் திரையுலகின் ஈடு இணையற்ற நகைச்சுவை நடிகரான என்.எஸ். கிருஷ்ணன் தொடக்கப் பாடலைப் பாடினார்.**

A) [A] is true, [R] is false / [A] சரி, [R] தவறு

B) [A] and [R] are true, [R] is correct explanation of [A] / [A] மற்றும் [R] சரி, [R], [A] விற்கான சரியான விளக்கம்

C) [A] is false, [R] is true / [A] தவறு, [R] சரி

D) [A] and [R] are true, [R] is not correct explanation of [A] / [A] மற்றும் [R] சரி, [R], [A] விற்கான சரியான விளக்கம் அல்ல

E) Answer Not Known / விடை தெரியவில்லை

173. **The Military General, who suppressed the Vellore Mutiny was ______**

**வேலூர் கலகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த இராணுவத் தளபதி ______ ஆவார்.**

A) George Carmichael Smyth / ஜார்ஜ் கார்மிசெல் ஸ்மித்

B) Colonel Robert Rollo Gillespie / கர்னல் ராபர்ட் ரோலோ கில்லெஸ்பி

C) John Nicholson / ஜான் நிக்கல்சன்

D) William Hodson / வில்லியம் ஹாட்சன்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

174. **Choose the right matches :**

**Editors - Magazines**

**(1) Dr. Navalar - Puduvazhvu**

**(2) K.A. Mathiyazhagan - Thennagam**

**(3) Kanchi Manimozhiyar - Porval**

**(4) Mayavaram Natarasan - Inamuzhakkam**

**சரியாகப் பொருந்தியுள்ளவற்றை தேர்ந்தெடு :**

**பதிப்பாசிரியர் - இதழ்கள்**

**(1) டாக்டர். நாவலர் - புதுவாழ்வு**

**(2) கே.ஏ. மதியழகன் - தென்னகம்**

**(3) காஞ்சி மணிமொழியார் - போர்வாள்**

**(4) மாயவரம் நடராசன் - இனமுழக்கம்**

A) (1) and (3) are correct / (1) மற்றும் (3) சரியானவை

B) (1) and (2) are correct / (1) மற்றும் (2) சரியானவை

C) (2) and (3) are correct / (2) மற்றும் (3) சரியானவை

D) (3) and (4) are correct / (3) மற்றும் (4) சரியானவை

E) Answer Not Known / விடை தெரியவில்லை

175. **What are the causes for the defeat of Justice Party in the Madras Legislative Assembly Elections - 1937?**

**(i) The Justice Party could not match the new methods employed by the Congress.**

**(ii) The hostility of the press towards Justice Party.**

**(iii) The emotional appeal for Poorna Swaraj by the Congress.**

**(iv) The entry of people's party of Maharaja of Pithapuram as a third force.**

**1937 ஆம் ஆண்டு சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் நீதிக்கட்சியின் தோல்விக்கான காரணங்கள் என்ன?**

**(i) காங்கிரஸ் பின்பற்றிய புதிய முறைகளை நீதிக்கட்சியால் எதிர்கொள்ள முடியவில்லை.**

**(ii) நீதிக்கட்சியின் மீதான பத்திரிகைகளின் விரோதப்போக்கு.**

**(iii) பூரண சுவராஜ்யத்திற்கான காங்கிரசின் உணர்ச்சி பூர்வமான வேண்டுகோள்.**

**(iv) பிதாபுரம் மகாராஜாவின் 'மக்கள் கட்சி' மூன்றாவது சக்தியாக நுழைந்தது.**

A) (i) and (iii) only / (i) மற்றும் (iii) மட்டும்

B) (i), (ii) and (iv) only / (i), (ii) மற்றும் (iv) மட்டும்

C) (i), (iii) and (iv) only / (i), (iii) மற்றும் (iv) மட்டும்

D) (i), (ii), (iii) and (iv) / (i), (ii), (iii) மற்றும் (iv)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

176. **Reason and Assertion Type.**

**Assertion [A] : According to Perarignar Anna resolution members should renounce titles such as Sir, Diwan.**

**Reason [R] : Members should drop the existing titles if want they can append them to names in future.**

**காரணம் மற்றும் வலியுறுத்தல் வகை.**

**வலியுறுத்தல் [A] : பேறிஞர் அண்ணா தீர்மானத்தின்படி உறுப்பினர்கள், சர், திவான் போன்ற பட்டங்களைத் துறக்க வேண்டும்.**

**காரணம் [R] : உறுப்பினர்கள் ஏற்கனவே உள்ள பட்டங்களைக் கைவிட வேண்டும். வேண்டுமென்றால் எதிர்காலத்தில் தங்கள் பெயர்களுடன் சேர்த்துக் கொள்ளலாம்.**

A) [A] is true but [R] is false / [A] சரி, ஆனால் [R] தவறு

B) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A] / [A] மற்றும் [R] இரண்டும் சரி, மற்றும் [R] என்பது [A]ன் சரியான விளக்கம்

C) [A] is false, [R] is true / [A] தவறு, [R] சரி

D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A] is correct / [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A]ன் சரியான விளக்கம் இல்லை என்பது சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

177. **Match the following leaders with the positions they held in Provincial Executive Committee of Tamil Nadu Harijan Sevak Sangh :**

**(a) C. Rajagopalachari - 1. President**

**(b) G. Ramachandran - 2. Member**

**(c) T. S. S. Rajan - 3. Secretary**

**பின்வரும் தலைவர்களோடு அவர்கள் தமிழகத்தில் ஹரிஜன் சேவக் சங்கத்தின் செயற்குழுவில் வகித்த பதவியோடு பொருத்துக :**

**(a) சி. இராஜகோபாலாச்சாரி - 1. தலைவர்**

**(b) ஜி. இராமச்சந்திரன் - 2. உறுப்பினர்**

**(c) டி.எஸ்.எஸ். இராஜன் - 3. செயலாளர்**

A) 1 2 3

B) 2 3 1

C) 3 1 2

D) 3 2 1

E) Answer Not Known / விடை தெரியவில்லை

178. **Match the following and choose the correct answer from the codes given below :**

**(a) P.S. Kumarasamy Raja - 1. Bharathi Asiramam**

**(b) Subramaniya Siva - 2. Bharatha Matha Sangam**

**(c) Neelakanda Brammachari - 3. Gandhi Asiramam**

**(d) Rajaji - 4. Meenakshi Sahaya Viveka Vidyalayam**

**கீழ்கண்டவற்றைப் பொருத்தி சரியான விடையைக் குறியீடுகளிலிருந்து தேர்வு செய்க :**

**(a) பி.எஸ். குமாரசாமி ராஜா - 1. பாரதி ஆசிரமம்**

**(b) சுப்ரமணிய சிவா - 2. பாரத மாதா சங்கம்**

**(c) நீலகண்ட பிரம்மச்சாரி - 3. காந்தி ஆசிரமம்**

**(d) இராஜாஜி - 4. மீனாட்சி சகாய விவேகா வித்யாலயம்**

A) 4 1 2 3

B) 4 2 3 1

C) 4 3 1 2

D) 4 2 1 3

E) Answer Not Known / விடை தெரியவில்லை

179. **Match correctly the Newspaper with their Year of Foundation :**

**(a) The Hindu - 1. 1785**

**(b) Swadesamitran - 2. 1925**

**(c) The Madras Courier - 3. 1878**

**(d) Kudiyarasu - 4. 1882**

**செய்தித்தாளை அவற்றின் தொடங்கப்பட்ட ஆண்டோடு சரியாகப் பொருத்தவும் :**

**(a) தி இந்து - 1. 1785**

**(b) சுதேசமித்ரன் - 2. 1925**

**(c) தி மெட்ராஸ் கொரியர் - 3. 1878**

**(d) குடியரசு - 4. 1882**

A) 3 4 1 2

B) 2 3 1 4

C) 1 3 2 4

D) 1 4 3 2

E) Answer Not Known / விடை தெரியவில்லை

180. **Match correctly the Authors with their Work :**

**(a) Sudarka - 1. Mudrarakshasa**

**(b) Amar Singh - 2. Kavyadarsana**

**(c) Daudin - 3. Mrichchhakatika**

**(d) Visakhadatta - 4. Amarkosha**

**ஆசிரியர்களை அவர்களின் படைப்புகளுடன் சரியாகப் பொருத்துக :**

**(a) சுடர்கா - 1. முத்ரா ராக்ஷஸா**

**(b) அமர் சிங் - 2. காவ்யதர்சனா**

**(c) டாடின் - 3. மிர்ச்சகாட்டிகா**

**(d) விசாகதத்தா - 4. அமர்கோஷா**

A) 3 1 2 4

B) 3 4 2 1

C) 2 3 4 1

D) 4 2 1 3

E) Answer Not Known / விடை தெரியவில்லை

181. **Name the author of Usliaparinayam, a Telugu work which mention about the grant of Madrasapatnam to English in 1639 A.D.**

**கி.பி. 1639 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு மதராஸ்பட்டணம் வழங்கப்பட்டதைப் பற்றி குறிப்பிட்டுள்ள தெலுங்கு படைப்பான உஸ்லியபரிணயம் என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார்?**

A) Raja Ram / ராஜா ராம்

B) Anka Bhubala / அங்கா பூபாலா

C) Ravi Ram / ரவி ராம்

D) Tulasi / துளசி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

182. **(i) A crow can conquer an owl in daytime.**

**(ii) The crocodile is all powerful in deep water. But on land other animals defeat it.**

**(iii) As ship cannot sail on land. The wheeled chariots can not run on the seas.**

**According to the statement mentioned above which is/are belongs to Valluvar's Kaalam Arithal (Choose proper time)**

**காலமறிதல் பற்றிய வள்ளுவர் கூற்றில் சரியான பதிலைத் தேர்வு செய்க.**

**(i) ஒரு கூகை இரவில் வலிமைமிக்கதாக இருந்தாலும், பகலில் வலிமை குறைந்த காக்கை அதனை வீழ்த்திவிடும்.**

**(ii) ஆழமான நீர்நிலையில் முதலை பிற உயிரினங்களை வெல்லும். அந்த நீர் நிலையைவிட்டு வெளியே வந்தால் முதலையைப் பிற உயிரினங்கள் வெல்லும்.**

**(iii) நிலத்தில் ஓடும் வலிய தேர்கள் கடலில் ஓடாது. கடலில் ஓடும் நாவாயும் நிலத்தில் ஓடாது.**

A) (i) only correct / (i) மட்டும் சரி

B) (ii) only correct / (ii) மட்டும் சரி

C) (ii) and (iii) only correct / (ii) மற்றும் (iii) மட்டும் சரி

D) (i) and (iii) only correct / (i) மற்றும் (iii) மட்டும் சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

183. **Choose the correct answers from the given options :**

**Commentators on the Thirukkural**

**(1) Pariperumal**

**(2) Perumal Murugan**

**(3) Abdul Raguman**

**(4) Parithiyar**

**கொடுக்கப்பட்ட விடைகளுள் சரியானவற்றைத் தேர்ந்தெடு :**

**திருக்குறள் உரையாசிரியர்கள்**

**(1) பரிப்பெருமாள்**

**(2) பெருமாள் முருகன்**

**(3) அப்துல் ரகுமான்**

**(4) பரிதியார்**

A) (1) and (2) are correct / (1) மற்றும் (2) சரி

B) (2) and (3) are correct / (2) மற்றும் (3) சரி

C) (1) and (4) are correct / (1) மற்றும் (4) சரி

D) (3) and (4) are correct / (3) மற்றும் (4) சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

184. **Arrange the following events in chronological order :**

**(1) Sivagnana Bodham**

**(2) Thirukkalitruppadiyar**

**(3) Thiruvundhiyar**

**(4) Kodikavi**

**பின்வரும் நிகழ்வுகளை காலவரிசைப்படி ஒழுங்கமைக்கவும் :**

**(1) சிவஞான போதம்**

**(2) திருக்களிற்றுப்படியார்**

**(3) திருவுந்தியார்**

**(4) கொடிக்கவி**

A) (3), (2), (1), (4)

B) (1), (3), (2), (4)

C) (2), (3), (1), (4)

D) (4), (1), (3), (2)

E) Answer Not Known / விடை தெரியவில்லை

185. **Reason and Assertion type :**

**Assertion [A] : Cheran started to fan the Mosi Keeranar with the fan made of yac's hair.**

**Reason [R] : Because the best pleasure is the purest pleasure of being with classical Thamizh.**

**கூற்று மற்றும் காரணம் வகை :**

**கூற்று [A] : சேரன் மோசிகீரனாருக்குக் கவரி வீசினான்.**

**காரணம் [R] : செந்தமிழ் இன்பமே சிறந்த இன்பம் என்பதனால்.**

A) Both [A] and [R] are false / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் தவறு

B) Both [A] and [R] are true / கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி

C) [A] is true but [R] is false / கூற்று [A] சரி ஆனால் காரணம் [R] தவறு

D) [A] is false [R] is true / கூற்று [A] தவறு காரணம் [R] சரி

E) Answer Not Known / விடை தெரியவில்லை

186. **Match the following :**

**South Language - North Language**

**(a) Arasan - 1. Sabai**

**(b) Avai - 2. Sri**

**(c) Thiru - 3. Prathi**

**(d) Padi - 4. Rajan**

**பொருத்துக :**

**தென்மொழி வடிவம் - வடமொழி வடிவம்**

**(a) அரசன் - 1. சபை**

**(b) அவை - 2. ஸ்ரீ**

**(c) திரு - 3. பிரதி**

**(d) படி - 4. ராஜன்**

A) 4 1 2 3

B) 4 2 1 3

C) 4 3 2 1

D) 1 2 3 4

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**187. A and B together can complete a piece of work in 15 days and B alone can do it in 20 days. In how many days can A alone complete the work?**

**A மற்றும் B இருவரும் இணைந்து ஒரு வேலையை 15 நாட்களில் முடிப்பர். B மட்டும் தனியாக அந்த வேலையை 20 நாட்களில் முடிப்பார் எனில், A மட்டும் அதே வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?**

A) 70

B) 80

C) 40

D) 60

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**188. 10 persons begin to work together on a job but after some days 4 persons leave. As a result, the job which could have been completed in 40 days is completed in 50 days. How many days after the commencement of the work did the 4 persons leave?**

**10 நபர்கள் இணைந்து ஒரு வேலையை செய்ய தொடங்குகின்றனர். ஆனால் குறிப்பிட்ட தினங்களுக்குப் பின் 4 நபர்கள் வெளியேறிவிடுகின்றனர். அதன் விளைவாக 40 நாட்களில் முடிவடைய வேண்டிய வேலையானது 50 நாட்களில் முடிவடைகிறது. எனில் வேலை தொடங்கிய பின் எத்தனை நாட்கள் கழித்து நான்கு நபர்கள் வெளியேறினார்கள்?**

A) 20 days / 20 நாட்கள்

B) 30 days / 30 நாட்கள்

C) 35 days / 35 நாட்கள்

D) 25 days / 25 நாட்கள்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**189. If side of a square is "x" meter and area of that square is x square meter, then which of the following is true?**

**ஒரு சதுரத்தின் பக்கம் x மீட்டர், மற்றும் அதன் பரப்பு x சதுர மீட்டர் எனில், பின்வருவனவற்றுள் எது சரி?**

A) It is not possible / இவ்வாறு இருக்க வாய்ப்பு இல்லை

B) It is true for all values of x / x ன் அனைத்து மதிப்புகளுக்கும் உண்மை

C) It is true for x = 1,4,9,16 ..... / x = 1,4,9,16 ..... எனில் உண்மை

D) It is true for x = 1 / x = 1 எனில் உண்மை

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**190. A sum of money triples itself in 12 years when the principal and compound interest are added. In how many years will it become nine times the sum?**

**12 ஆண்டின், அசல் மற்றும் கூட்டு வட்டியின் கூட்டுத்தொகை (கூடுதல்) மூன்று மடங்கு எனில், எத்தனை ஆண்டுகளில் அது ஒன்பது மடங்காக பெருகும்?**

A) 36 years / 36 ஆண்டுகள்

B) 24 years / 24 ஆண்டுகள்

C) 42 years / 42 ஆண்டுகள்

D) 72 years / 72 ஆண்டுகள்

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**191. A sum of Rs. 1,550 was lent partly at 5% and the remaining amount at 8% simple interest. The total interest received after 3 years was Rs. 300. The ratio of money lent at 5% to that lent at 8% is ______.**

**ரூ. 1,550 ஆனது 5% தனிவட்டிக்கு ஒரு குறிப்பிட்ட பாகமும், 8% தனிவட்டிக்கு மீதத் தொகையும் கடனாகக் கொடுக்கப்படுகிறது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பெறப்படும் மொத்த வட்டி ரூ. 300 எனில் 5% தனிவட்டிக்கு கடனாகக் கொடுக்கப்படும் தொகை மற்றும் 8% தனிவட்டிக்கு கடனாகக் கொடுக்கப்படும் தொகையின் விகிதம் ______ ஆகும்.**

A) 5 : 8

B) 8 : 5

C) 31 : 6

D) 16 : 15

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**192. If (x + y) : (x - y) = 7 : 3 then find the ratio $(x^3 + y^3) : (x^3 - y^3)$**

**(x + y) : (x - y) = 7 : 3 எனில் $(x^3 + y^3) : (x^3 - y^3)$ ன் விகிதம் என்ன?**

A) 240/315

B) 33/21

C) 233/188

D) 133/117

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**193. If LCM of a and b is 100 and a + b = 45. Find the difference between a and b.**

**a, b இவற்றின் மீப்பெரு பொது மடங்கு 100 மற்றும் a + b = 45 எனில் a மற்றும் b இவற்றிற்கிடையே உள்ள வித்தியாசம் காண்க.**

A) 55

B) 5

C) 25

D) 15

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**194. If a% of "a" is "a". Then what is b% of "a"?**

**"a" ன் a% ஆனது "a" எனில் "a" ன் b% ஆனது என்ன?**

A) a

B) b

C) c

D) None of these / இவற்றில் எதுவும் இல்லை

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**195. If x + y + z = 0 then $x^3 + y^3 + z^3 + 3xyz$ is equal to _____.**

**x + y + z = 0 எனில் $x^3 + y^3 + z^3 + 3xyz$ என்பவற்றிற்குச் சமமானவை எவை?**

A) 0

B) 6 xyz

C) 12 xyz

D) xyz

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**196. In a certain code, if PAY is written as DAE then DIP will be written as ______.**

**ஒரு குறியீட்டில், PAY என்பது DAE என எழுதப்பட்டால், DIP என்பது _____ என எழுதப்படும்.**

A) PJD

B) BCD

C) BAD

D) PAD

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**197. The next term of the given series is :**

**YEB, WFD, UHG, SKI, _____**

**கீழே கொடுக்கப்பட்டுள்ள வரிசையில் வரும் அடுத்த உறுப்பு எது?**

**YEB, WFD, UHG, SKI, _____.**

A) QOL

B) QGL

C) TOL

D) QNL

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**198. A train Travels from Chennai to Delhi for 53 hours. If the train starts on Monday night 8.30 pm, find the day and time when the train would reach Delhi.**

**ஒரு இரயில் சென்னையிலிருந்து டெல்லிக்கு 53 மணி நேரம் பயணிக்கிறது. அந்த இரயில் திங்கட்கிழமை இரவு 8.30 மணிக்குப் புறப்பட்டால் அது சென்றடையும் நேரமும் நாளும் என்ன?**

A) Wednesday 1.30 am / புதன்கிழமை அதிகாலை 1.30

B) Wednesday 1.30 pm / புதன்கிழமை பிற்பகல் 1.30

C) Thursday 1.30 am / வியாழக்கிழமை அதிகாலை 1.30

D) Thursday 1.30 pm / வியாழக்கிழமை பிற்பகல் 1.30

E) Answer Not Known / விடை தெரியவில்லை

**199. A store reduces the price of 1 product by 20%. How many % do you need to raise to the % to get the original price.**

**ஒரு கடை ஒரு பொருளின் விலையை 20% குறைத்தது. உண்மை விலையைக் கண்டறிய எத்தனை சதவீதம் உயர்த்த தேவையிருக்கும் (%) சதவிகிதத்தைக் காண்க.**

A) 30%

B) 27%

C) 25%

D) 20%


E) Answer Not Known / விடை தெரியவில்லை


**200. The three position of a dice is given below**

**Choose figure will be formed when the dice is unfolded?**

**ஒரு பகடையின் 3 நிலைகள் கொடுக்கப்பட்டுள்ளன**

**மேலே உள்ள பகடை பிரிக்கப்படும் போது எந்த உருவம் உருவாகும்?**






A) Figure (A) / படம் (A)

B) Figure (B) / படம் (B)

C) Figure (C) / படம் (C)

D) Figure (D) / படம் (D)

E) Answer Not Known / விடை தெரியவில்லை